Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1639)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 29 (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:26

# மீனவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து

# பருத்தித்துறையில் மறியற் போராட்டம்!

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

**பருத்தித்துறை முனைப்பகுதியில் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து - நேற்று கண்டன எதிர்ப்பு பேரணியும், இரு மணிநேரம் கடையடைப்பு போராட்டமும் நடைபெற்றன. இந்த கண்டனப் பேரணியில், ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.**

நேற்றுக்காலை 9 மணிக்கு, சென். தோமஸ் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகிய கண்டனப் பேரணி - மூன்றாம் குறுக்குத்தெரு வீதியூடாக பருத்தித்துறை, தும்பளை வீதியை வந்தடைந்து, அங்கிருந்து மெத்தைக் கடைச் சந்தியூடாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் இப்பேரணியில் கலந்துகொண்டனர். மீனவர்களின் இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினகள் எம்.கே.சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராசா ஆகியோ

(10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரைப் படத்தில் காணலாம்.

## கிண்ணியா சம்பவம் தொடர்பாக முஸ்லிம்கள் - பொலிஸார் சந்திப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக பிரதேச முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையே விசேட சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பணிமனையில் நடைபெற்றது.

மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையில் நடந்த இந்தச் சந்திப்பில் முஸ்லிம்கள் தரப்பில் கிண்ணியா உலமாக்கள் சபையினரும், பொலிஸார் தரப்பில் திருகோணமலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தயா சமரவீர, தலைமைப் பொலிஸ் அத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தளபதி பதுமன் திருமலைக்கு திரும்பினார்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் நேற்று திருகோணமலைக்கு திரும்பியுள்ளார்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் இருந்து, விமானப்படையின் ஹெலி மூலம் இவர் திருகோணமலை திரும்பியுள்ளார். இவரை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



கேணல் பதுமனை வழியனுப்பும் தமிழ்ச்செல்வன்

# வட - கிழக்கில் போர்நிறுத்தத்தை கண்காணிக்கும் பணி தொடரும்!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தகவல்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து மேஜர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சனை நீக்கும்படி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நோர்வே பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ள போதிலும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொள்ளுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணப்புக்குழு வட்டாரங்கள் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், உத்தியோகபூர்வ அறிவித்தல் கிடைக்கும்வரை, கண்காணிப்புக் குழு போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதேவேளை, சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய நோர்வே இராஜதந்திரிகள் தகவல் வெளியிடும்போது,

நோர்வே பிரதமர் கஜெல் பொண்டவிக் விரைவில் ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதத்துக்குப் பதில் வழங்குவார் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் இக்கடிதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜரோப்பிய இராஜதந்திரி ஒருவர் கருத்துவெளியிட்டபோது போர்நிறுத்

((10 ஆம் பக்கம் பார்க்க)

# நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வே தூதுக்குழு அடுத்த மாதம் வரும்!

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர், அடுத்த மாதம் 10 ஆம் திகதி கொழும்புக்கு வரவுள்ளனர்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்களை மேற்கொள்ளவே, இவர்கள் இலங்கை வரவுள்ளனர்.

நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களான இவர்கள் - இடைக்கால நிர்வாக திட்டவரைப்புகள் குறித்து இரு தரப்புக்களுடனும் விரிவாக ஆராயவுள்ளதுடன், இரு தரப்புக்களுடனும் பேசி, இடைவெளிகளைக் குறைப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவார்கள் எனத் தெரியவருகிறது.

விதார் ஹெல்கிசன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துப் பேசலாம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் அமெரிக்காவுக்கு அடுத்த மாதம் பயணம்!

(கொழும்பு)

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா அடுத்த மாத முற்பகுதியில் அமெரிக்க விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதிவரை அவரின் அமெரிக்க விஜயம் இடம்பெறும் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் விஜயத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் - உயிலங்குளத்தில்

## பெண் மீதான வல்லுறவு; கண்டித்து நாளை பேரணி!

(மன்னார்)

மன்னார் உயிலங்குளத்தில், இளம் பெண் ஒருவர் மீது அண்மையில் பொலிஸாரினால், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக், கண்டித்தும் நாளை பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை காலை உயிலங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் இந்தக் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளதாக பேரணியை ஒழுங்கு செய்த மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

உயிலங்குளத்தில் உள்ள பொலிஸ், மற்றும் இராணுவக்காவலரண்களை உடனடியாக அகற்ற வேண்டும். பெண்களின் பாதுகாப்பு, சுதந்திரம், என்பன பாதுகாக்கப்படுவதோடு அவர்கள் வீடுகளில் அச்சமின்றி வசிக்கவும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஏயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1620)

# மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு; சிறுவர், முதியோர் தின போட்டி முடிவுகள்!

(மருதங்கேணி)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அண்மையில் நடத்தப்பட்ட சிறுவர் , முதியோர் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு -

*சிறுவர்தினம்*

**கீழ்ப்பிரிவு**

**கவிதை**

யோ.சுகிதா (ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), ந.கம்சியா (மருதங்கேணி இ.த.க பாடசாலை), த.கிருத்திகா (உடுத்துறை மகா வித்தியாலயம்), பா.கனுசியா (மருதங்கேணி இ.த.க பாடசாலை), யோ. பெறிலின்கில்பா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா)

**பேச்சு**

கு.கிருஷ்ணா (உடுத்துறை மகாவித்தியாலயம்), வெ.ஜெயராட் (குடத்தனை அ.த.க பாடசாலை), இ.நிஷாந்தி (உடுத்துறை மகா வித்தியாலயம்), செ.அஜந்தா (குடத்தனை அ.மி.த.க பாடசாலை), சி.சகிதா (ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்).

**கட்டுரை**

வே.அகிலேஸ்வரன் (உடுத்துறை மகாவித்தியாலயம்), கி.நிறஞ்சினி (தாளையடி றோ.க.த.க பாடசாலை), பா.விஜிதா (குடத்தனை அ.மி.த.க பாடசாலை), ந.காஞ்சனா (அம்பன் அ.மி.த.க பாடசாலை), பா.சுபா (மருதங்கேணி இ.த.க பாடசாலை).

**மத்திய பிரிவு**

**கவிதை**

அ.அகிலன் (நாகர்கோவில் மகா வித்தியாலயம்), ப.சந்திரகலா (அம்பன் அ.மி.த.க பாடசாலை), மு.நாகேஸ்வரன் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலயம்), கை.தர்மினி (உடுத்துறை மகா வித்தியாலயம்).

**பேச்சு**

ம.சுகிந்தா (ஆழியவளை சி.சி.த.க பாடசாலை), அ.ஜெயரூபி (வெற்றிலைக்கேணி பர.வித்தியாலயம்), வே.கோகலா (அம்பன் அ.மி.த.க பாடசாலை), நீ.அருள்நேசன் (மணற்காடு றோ.க.த.க பாடசாலை), த.இளங்கோ (உடுத்துறை மகாவித்தியாலயம்), அ.மேரிஜர்மினா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை).

**கட்டுரை**

டென்சியானா (வெற்றிலைக்கேணி பர.வித்தியாலயம்), ச.சக்திவேல் (உடுத்துறை மகாவித்தியாலயம்), இ.கார்த்திகா (அம்பன் அ.மி.த.க பாடசாலை), த.கபில் (ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), ந.நதியா (குடத்தனை அ.த.க பாடசாலை).

*முதியோர் தினம்*

**கீழ்ப்பிரிவு**

**கவிதை**

ச.சென்தா (அம்பன் அ.மி.த.க பாடசாலை), யோ.கனிஸ்வரா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை), த.நிரோஜினி (குடத்தனை அ.மி.தக. பாடசாலை), க.ஜிசிதா (உடுத்துறை மகாவித்தியாலயம்), சிந்துஷா (உடுத்துறை மகாவித்தியாலயம்).

**பேச்சு**

அ.சிந்துஜா (குடத்தனை அ.த.க பாடசாலை), சோ.விஜிதா (ஆழியவளை சி.சி.த.க பாடசாலை), பா.விஜிதா (அம்பன் அ.மி.த.க பாடசாலை), த.ஆ·ஷா (ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), க.ஜனனி (மருதங்கேணி இ.த.க பாடசாலை).

**கட்டுரை**

ந.சத்தியா (ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), தெ.சிவகௌரி (நாகர்கோயில் மகாவித்தியாலயம்), ச.றொபின்ரலா (வெற்றிலைக்கேணி பர.வித்தியாலயம்), ச.துருபா (குடத்தனை அ.த.க பாடசாலை), பொ. பிறேம்சுசி (உடுத்துறை மகாவித்தியாலயம்).

**மத்திய பிரிவு**

**கவிதை**

ம.அனிதா (நாகர்கோயில் மகா வித்தியாலயம்), செ.நிரோஜா மணற்காடு றோ.க.த.க பாடசாலை), மை.ஜோய் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), ஐங்கரதீபன் (அம்பன் அ.மி.த.க பாடசாலை), கு.இமெல்ரா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை).

**பேச்சு**

பி.செல்வபிரான்சினி (மருதங்கேணி இ.த.க பாடசாலை), சி.துர்க்கா (நாகர்கோயில் மகாவித்தியாலயம்), து.ஜெனனி (ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), இ.ஜனனி (அம்பன் அ.மி.த.க பாடசாலை), பொ.ஜெபதாஸ் (தாளையடி றோ.க.த.க பாடசாலை).

**கட்டுரை**

க.சுகிதா (குடத்தனை அ.த.க பாடசாலை), க.நிரோஜினி (மருதங்கேணி இ.த.க பாடசாலை), கு.வேணு (மருதங்கேணி இ.த.க பாடசாலை), கு.கஜேந்திரன் (ஆழியவளை சி.சி.த.க பாடசாலை), சி.சத்தியவரதன் (ஆழியவளை சி.சி.த.க பாடசாலை).

# புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரிப்பு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு நாகதம்பிரான் கோயிலடிச் சூழலில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகளவில் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

இப்பிரதேசத்திலுள்ள பற்றைகள் நிறைந்த பகுதியில் வைத்து, இரவு வேளைகளில் கசிப்பு எரிக்கப்படுவதாகவும், பின அவை சற்றுத் தொலைவில் கொண்டுசென்று விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், விற்பனையில் ஈடுபடுவோர் கசிப்பை விவசாய நிலங்களில் மறைத்துவைத்திருப்பதாகவும், கூறப்படுகிறது. அதாவது, எருக்குவியல் மற்றும் நடுகை செய்யப்பட்ட சணலுக்குள் கசிப்பினை மறைத்து வைத்திருக்கிறார்கள்.

மேலும், வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தி விற்பனை செய்வதுடன், மிகுதியை இரவோடிரவாக பிற இடங்களுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறப்படுகிறது.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு குற்றப்பணம் கட்டியவர்களே, கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (83)

## யாழ்.குடாநாட்டில்

# பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை!

தமிழீழ சுகாதார சேவைப்பகுதியினரால், பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துமாறு கோரும் பதாகைகள் குடாநாட்டின் பல பகுதிகளில் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம் நகரப்பகுதிகளில் இப்பதாகைகள் கட்டப்பட்டுக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில இடங்களில் பொலித்தீன் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ள இந்த வேளையில், பிரதான நகரப்பகுதிகளில் என்றுமில்லாதவாறு பொலித்தீன் பாவனை அதிகரித்துக் காணப்படுவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (83)

# சின்னஞ்சிறு செய்திகள்

## லியோ கழகத்தினால் மருத்துவப் பரிசோதனை

மானிப்பாய் லியோ கழகத்தினால், இரத்த தானமும் மருத்துவ பரிசோதனையும் இடம்பெறவுள்ளது. இன்று தொடர் திட்ட செயற்பாடுகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் கழக அங்கத்தவர்களின் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும், செவ்வாய்க்கிழமை கொக்குவிலிலுள்ள ஸ்தான தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனையும் பற்களின் பாதுகாப்புத் தொடர்பான மேலதிக விளக்கங்களும் இடம்பெறவுள்ளது. (91)

## கந்தசஷ்டி காலத்தில் சந்நிதியில் விசேட நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை, கந்தசஷ்டி விரத காலங்களில் தினமும் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இன்றையநாள் நிகழ்வில் பெரிய புராணத்தில் விஞ்சி நிற்பது இறை பக்தியா அல்லது வீரமா என்ற பொருளில் பட்டிமன்றம் நடைபெறும்.(76)

## புத்தாக்குனர் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் புத்தாக்குனர் கண்காட்சி- நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், புத்தாக்குனர் கழக இணைப்பாளர் கே.சரத் கலந்துகொள்ளவுள்ளார்.

## மெய்கண்ட தேவர் குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்துடன் இணைந்து நடத்தும் சந்தானகுரவர் மெய்கண்ட தேவரின் குருபூசை விழா, வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில், நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில், பூசை வழிபாடு, சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜீவா, ஸ்ரீதேவி நடித்த
தித்திக்குதே
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
T.TOX
(சி-1618)

சிறுவிளம்பரம்
காணி விற்பனைக்கு
உடுப்பிட்டிச் சந்தி சனசமூக நிலைய ஒழுங்கையில் உள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு:- அருள்ராஜா செல்வராணி மே/பா சத்தியமூர்த்தி கோகுலம் சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சி-1738)

# அறிவித்தல்

## வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) கிளைக்குழுக்கள் தெரிவு

★ மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை 15.11.2003 இல் அழைத்து கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவுசெய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ இதற்கென ஒவ்வொரு கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை அழைபபதற்கு என்னால் பெயர் குறித்து தவிசாளர்களை நியமித்துள்ளேன்.

தகைமையுள்ள அங்கத்தவர்களுக்கு கூட்ட அறிவித்தல்கள் தவிசாளர்களினால் ஒப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ் அறிவித்தல் கிடைக்கப்பெறாத எவரேனும் தகைமையுள்ள அங்கத்தவர் அன்றைய தினம் தங்களுக்குரிய கிளைப் பொதுச் சபை கூட்டத்திற்கு உரிய நேரத்திற்கு சமுகமளித்து கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்யமுடியும்.

★ மேலும் இக் கிளைக்குழு தெரிவு பற்றிய விபரம் கிளைப் பொதுச்சபை நடைபெறும் இடம், காலம் மற்றும் கிளைக்குழு உறுப்பினராக தெரிவு செய்ய தகுதியற்ற விபரம் என்பன அடங்கிய அறிவித்தல் விபரம் சங்கத்தின் கிளைகளிலும் சங்கத்தின் தலைமை காரியாலயத்திலும் பார்வையிட முடியும்.

கூட்டுறவு
உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்
28.10.2003·

ஒப்பம்.செ.கனகசபாபதி
கூட்டுறவு உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/1737)

நமது ஈழநாடு நடாத்தும்
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2003 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு
விபரங்கள் வெகுவிரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்.
அனுசரணை வழங்குவோர்
ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
செலான் வங்கி
SEYLAN BANK LIMITED
டிக்கிரி கணக்கு
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டபத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்



“நாம் சிறுவர்களைக் குணப்படுத்தச் செலவு செய்யும் பணம், அவர்களை 70 வருடங்கள் வாழவைக்கும் அது மிகப் பயனுள்ளது”
டாக்டர்ஏ.ஜே.மோரல்(குழந்தை வைத்திய நிபுணர்)
அரும்புகள் சிறுவர் நிதியம்
யாழ்.மருத்துவ மாணவர் ஒன்றியம்
கணக்கு இல:-5-21-2022431-4 (இலங்கை வங்கி மேற்தரக்கிளை)
021-222-2134, 0777-678051

## சு.க.பேரணியில் பத்து இலட்சம்பேர் பங்குபற்றினராம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக தீபாவளி தினமான நேற்றுமுன்தினம் கொழும்பில் தாம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி - வெற்றிகரமாக அமைந்ததாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பத்து லட்சம் மக்கள் பங்கேற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், இந்தப் பேரணியில் ஒரு லட்சத்துக்கும் குறைந்தளவானோரே பங்குபற்றினர் என்று கொழும்புத் தகவல்கள் நேற்றுத் தெரிவித் திருந்தன.

# புலிகளுடனான நேரடிப் பேச்சு அடுத்த மாதம் மீண்டும் ஆரம்பம்!

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் மீண்டும் ஆரம்பமாகுமென அமைச்சரவை பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி நோர்வேப் பிரதிநிதிகள் ஊடாக இடைக்கால நிர்வாக யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முதன்முறையாக நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான தமது யோசனைகளைச் சமர்ப்பிக்கவுள்ளதால் இது முக்கிய நிகழ்வு என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் இந்த யோசனைகள் மூலம் அரசியல்தீர்வை நோக்கிய பயணம் மேலும் வலுப்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை - இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு சாதகமாக அமைந்திருக்கவில்லை என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கள் பிரதமரின் இந்திய விஜயத்தினையடுத்து ஆதாரமற்றவை என நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.





திருகோணமலையில் - நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் நூல் வெளியீட்டு விழாவில் தேசியக்கொடியை சாள்ஸ் அன்ரனி படையணித் தளபதி கோபித் ஏற்றுவதை முதற்படத்திலும், அடுத்துள்ள படத் தில் நூலை வெளியிட்டு வைப்பதையும் காணலாம்.

# பொலிஸ் மா அதிபரின் நியமனம்; ஆணைக்குழு சிபார்சு சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள பொலிஸ் மா அதிபர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் பொருட்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது சிபாரிசை அரசியல் யாப்பு சபையிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்தச் சிபார்சு நேற்று முன்தினம் அரசியல் யாப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு வின் தலைவரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான நஞ்சித் அபேயசூரிய தெரிவித்தார்.

இந்த சிபாரிசை அரசியல் யாப்புச்சபை பரிசீலித்த பின் புதிய பொலிஸ் மா அதிபர் தீர்மானிக்கப்படவுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா கடந்த 13 ஆம் திகதி ஓய்வுபெற்ற பின்னர் அப்பதவி வெற்றிடமாக இருந்து வருகின்றது.

இதனையடுத்து புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கும் பொருட்டு அரசியல் யாப்பு சபைக்கு ஜனாதிபதி சிபாரிசு செய்திருந்த போதிலும் இதுவரை பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படவில்லை.

இந்தச் சிபாரிசுக்கமைய தகுதியான ஒருவரை தேர்ந்தெடுப்பதில் சிக்கல் தோன்றியதால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உரிய ஒருவரை சிபாரிசு செய்யுமாறு அரசியல் யாப்பு சபையை கோரியிருந்தது.

இதன்படி சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்கள் மூவரது தகைமை தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கை தயாரித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் யாப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சிபாரிசுக்கமைய பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தகைமை அடிப்படையில் யார் நியமிக்கப்படுவார் என்பது அறிவிக்கப்படவில்லை.

# தமிழ்மக்கள் மீது ஆதிக்கத்தைச் செலுத்தவே அரசு இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது!

## 'தமிழ்கார்டியன்' பத்திரிகை தெரிவிப்பு

சிங்கள மேலாதிக்கத்தை விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் மக்கள் மீது பலாத்காரமாகத் திணிப்பதற்கே அரசாங்கம், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பதாக 'தமிழ் கார்டியன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

லண்டனிலிருந்து வெளிவரும் இந்தப் பத்திரிகையில் விடுதலைப் புலிகள் மீது ஒரு இராணுவ ரீதியான அச்சுறுத்தலை மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயல்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஒப்பந்தம் இலங்கையின் சமாதான முயற்சிகளை ஆரோக்கியமாக முன்னெடுத்துச் செல்வதற்கு சாதகமாக அமையாதெனவும் விசனம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# இசையுடன் இசைந்துள்ள யாழ்ப்பாண மக்கள் ஆன்மீக நிகழ்வுகளால் பெருமை சேர்த்தவர்கள்

## யாழ். வந்த குன்னக்குடி நமது ஈழநாட்டுக்குத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் இசையுடன் இணைந்தவர்கள். மக்களுக்கு பயன்படும் விதமாக ஆன்மீக இசை நிகழ்வுகளை நடத்தி யாழ்ப்பாணத்திறகே, உரித்தான பெருமையை வலுவூட்டியவர்கள்.

இவ்வாறு - நேற்று முன்தினம், நல்லூரில் வயலின் இசை மழை பொழிய வந்த, குன்னக்குடி வைத்தியநாதன் நமது ஈழநாடு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நான் முதன் முதலாக, எனது இசைக்கச்சேரியை நிகழ்த்துவதற்காக, யாழ்ப்பாணம் வந்ததையிட்டு மகிழ்வடைகிறேன். மகிழ்ச்சியான இந்த நல்ல நாளிலே, தீபாவளித் திருநாளில், இங்கு வந்ததை இன்னும் சிறப்பாகக் கருதுகிறேன். தீபாவளித் திருநாள் தேசிய விழாவாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுவது சிறப்பானதொரு அம்சமாகும்.

இவ்வாறான, ஒரு நிகழ்வைக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்துவது மகிழ்வாகவுள்ளது. நல்ல நிகழ்வுகளை, நல்லவர்களை அழைத்து வந்து, மக்களுக்குப் பயன்படும் விதமாக ஆன்மீகத்தையும் சரி, இரசனையையும் சரி மிகச் சிறப்பாக நடாத்தியமை, நடாத்துவது, என்றைக்குமே யாழ்ப்பாணத்திற்கு உரித்தான பெரியதொரு பாரம்பரியமாகும்.

இன்றைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே இந்த மண்ணில் பிறந்த இசைக்கலைஞர்கள், பிறதேசத்து இசைக் கலைஞர்களை, அண்டைய நாடுகளிலிருந்து இங்கு கூட்டிவந்து, அவர்களைப் பண்போடு உபசரித்து நிகழ்வுகளை நடத்தி அவர்களுக்கு மகிமை சேர்த்திருக்கிறார்கள்.



அவ்வாறானதொரு நிகழ்வு இன்று, நிகழ்வதையிட்டு பெருமகிழச்சியடைகிறேன். என்றைக்கும் இந்த யாழ்ப்பாண மக்கள் இசையுடன் இசைந்தவர்கள். அதன் பெருமையை உணர்ந்தவர்கள், நல்ல பண்டிதர்களாக உள்ளவர்கள், பண்புள்ளவர்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். எங்கு திரும்பினாலும் இங்கு ஆலயங்கள் உள்ளன. தீபாவளி தினத்தை இங்கு மிகச் சிறப்பாக கொண்டாடுகிறார்கள். அதற்காக அரசையும், யாழ்ப்பாண மக்களையும் நான் பாராட்டுகிறேன்.

எண்ணற்ற - தவில், நாதஸ்வரக் கலைஞர்களை தந்தது யாழ்ப்பாண மண். இந்த மண்ணிலே நின்று கொண்டு எனது செய்தியை 'நமது ஈழநாடு' பத்திரிகை மூலமாக தெரிவிப்பதையிட்டு, பெருமகிழ்வடைகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குதல் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் சிவநேசன் கேட்டுள்ளார்.

# பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சி!

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதுகுறித்து கல்வி அமைச்சு வட்டாரங்கள் தகவல் தருகையில், நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் இருந்து 950 அதிபர்களும், ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதற்காக 800 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. அதிபர்களின் முகாமைத்துவத்திறனை அதிகரிப்பதும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை வளர்ப்பதுமே இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தப் பயிற்சிக்காக, ஒவ்வொருவருக்கும் நான்கு இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

மலேசியா, கனடா, இஸ்ரேல், ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கே இவர்கள் அனுப்பப்படவுள்ளனர்.

இதேவேளை -

கல்விக்காக மேலும் அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்யவுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

தற்போது 30 பில்லியன் ரூபா கல்விக்காக ஒதுக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இராணுவம் - மீனவர் பிரச்சினை

# உரிய நடவடிக்கை எடுங்கள்

## ஒஸ்ரின் பெர்னாண்டோவிற்கு விநாயகமூர்த்தி கடிதம்

பருத்தித்துறையில் இராணுவத்தினருக்கும், மீனவர்களுக்கும் இடையே இடம்பெற்ற பிரச்சினையை - அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

பருத்தித்துறை - முனைப்பகுதியில் மாலை 6 மணிமுதல், மறுநாள் காலை 6 மணிவரை, மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இதனால் - மீனவர்கள் சிலருக்கும், படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகச் சுட்டிக்காட்டிய அப்பாத்துரை விநாயகமூர்த்தி, இந்த அனுமதிப்பத்திர முறையை இரத்துச் செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோன்ற சம்பவம் மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதுடன், பாதுகாப்புப் பிரிவினருக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குமாறும் அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை குறித்து ஆராய்வதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

# நேபாள பத்திரிகையாளர் யாழ்ப்பாணம் வருகிறார்

நேபாளத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் சுதந்திரப் பத்திரிகையாளர் குழுவொன்று - இந்தமாத இறுதியில் யாழ். வரவுள்ளது.

இந்தக் குழுவில் ஐந்து பத்திரிகையாளர்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.வரும் இக்குழுவினர் - இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிவதுடன், வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்துடன் விசேட சந்திப்பு ஒன்றையும் நடத்தவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(111)

# கராத்தே சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

மேஜர் ஈழப்பிரியா நினைவாக கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற, எட்டு மாவட்டங்களுக்கு இடையேயான கராத்தே இறுதிப்போட்டியில், கிளிநொச்சி மாவட்டம் வெற்றிபெற்றுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல்.துர்க்கா ஏற்றி வைத்தார்.

மேஜர் ஈழப்பிரியாவின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலையினை ஈழப்பிரியாவின் பெற்றோர்கள் அணிவித்தனர்.

ஈகச்சுடரினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் மாதவன் மாஸ்ரர் ஏற்றிவைத்தார். பிரதம விருந்தினராக விசேட படையணியின் தளபதி கேணல் சொர்ணம் கலந்துகொண்டார்.

வெற்றிபெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயத்தையும், அவர்களுக்கான பரிசில்களையும் விசேட படையணித் தளபதி கேணல் சொர்ணம் வழங்கிக் கௌரவித்தார்.

## கந்தசஷ்டி ஆராதனை

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் - ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில், கந்தசஷ்டி தின விசேட அபிஷேக ஆராதனைகள் இன்று ஆரம்பமாகி, தொடர்ந்து 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இக்காலத்தில் திருச்செந்தூர் புராணபடனமும் - ஓதுவார்களால் ஓதப்படவுள்ளது. (83)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும், புனித பத்திரிசியார் கல்லூரி அணிகளுக்குமிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் - நாளை புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டத்தில் 14, 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன. (41)

### புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தில்:

# பாதீனிய களைகளை அழிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பில்லை

புன்னாலைக்கட்டுவன் வடக்கு-ஈவினைப்பிரதேசத்தில் பெருகியுள்ள, பாதீனியம், களைகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தும், பொதுமக்கள் சமூகநோக்கில் முன்வராமையால், களைகளை அழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் பரந்து, வளர்ந்து காணப்படும் பாதீனியக் களைகளை- உடுவில் கமநலசேவைகள் நிலையமும், தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து, விவசாய சம்மேளனத்தின் ஊடாக கடந்த 13,14 ஆம் திகதிகளில் பாரியளவில் அழிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்றும், பொதுமக்கள் சமூகநோக்கில் சேவையிலீடுபட முன்வராமையால், இதனை நடைமுறைபபடுத்த முடியவில்லை என இப்பகுதி விவசாய சம்மேளனச் செயலாளர் க.அரசரத்தினம் கவலையுடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாதீனியக் களைகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் நபரொருவருக்கு - நான்கு மணித்தியால சேவைக்கு, ஊக்குவிப்பாக 2.5 கிலோகிராம் அரிசி, 300 கிராம் சீனி, மீன்ரின் மற்றும் 150 கிராம் பருப்பு என்பன - உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் கூட்டுறவுச்சங்கங்களுடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இங்குள்ள பொதுமக்கள், வழங்கப்படுகின்ற உலருணவுப்பொருட்களின் பெறுமதி, ஒருநாள் கூலிவேலை செய்வதன் மூலம் பெறப்படும் ஊதியத்தை விட குறைவாக இருப்பதனால், களைகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட மறுப்புத் தெரிவிப்பதாகவும், அதனாலேயே திட்டமிடப்பட்டிருந்த பாதீனியக் களைகள் அழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியவில்லை எனவும் கூறினார். (83)



கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடந்த மகளிர் விவகார உபகுழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம்.

## விவசாய உள்ளீடுகள் விநியோகம்

(ஆழியவளை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கமக்கார அமைப்புக்களுக்கு "மூவிங் மொன்ட்" நிறுவனம் - விதைநெல்லினையும், அதற்குரிய பசளைகளையும் வழங்கியுள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, போக்கறுப்பு ஆகிய கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகள் - பெரும்போக நெற்செய்கையினை மேற்கொள்வதற்கு உதவியாகவே இந்த மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

(122)

# வன்னியில் வெளிநாட்டு நிறுவனங்களின் நடவடிக்கைக்கு படைத் தரப்பு அதிருப்தி

(வன்னி)

வன்னியிலுள்ள வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை, வன்னியிலுள்ள படைத் தரப்பு கண்டித்துள்ளது.

வன்னியிலுள்ள வெளிநாட்டு அரசசார்பற்ற பிரதிநிதிகளுக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் - அரசாங்க அதிபருக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் - பாதுகாப்புப் பிரிவினருக்குத் தெரியாது, பொதுமக்களுக்கான பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றதாக பொலிஸ் அதிகாரி நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

அகதி முகாம்களில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்பை நடைமுறைப்படுத்தி வரும் இவர்கள், இந்தப் பாதுகாப்பை விலக்கிக் கொள்ளும் நேரம் பாதுகாப்புத் தரப்புக்குத் தெரிவிப்பதில்லை என்றும், இக்கலந்துரையாடலில் குற்றஞ்சாட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



### இரண்டாவது அகவையில்



பெயர் : ப.கிரிஷாந்

முகவரி : 2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.

### இரண்டாவது அகவையில்



பெயர் : ச.நிலக்ஷன்

முகவரி : இமையாணன், உடுப்பிட்டி.

### எட்டாவது அகவையில்



பெயர் : சு.தாமினா

முகவரி : 1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------

பெற்றோர் ஒப்பம்

- ★ யூனியன் கல்லூரி 15,17,19 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணி வீராங்கனை.
- ★ 1997 - 17 வயதுப் பிரிவு மாகாணமட்ட முதல் இடம்பெற்ற அணியின் வீராங்கனை (யூனியன் கல்லூரி).
- ★ 2001- 19 வயதுப் பிரிவு மாகாணமட்ட முதல் இடம்பெற்ற அணியின் வீராங்கனை (யூனியன் கல்லூரி).
- ★ 2002 - மாவட்ட 1 ஆம் இடம், மாகாண 2 ஆம் இடம்பெற்ற யூனியன் கல்லூரி அணி வீராங்கனை.
- ★ 2001- யாழ். மாவட்ட மற்றும் தேசியமட்ட தெரிவு அணி வீராங்கனை.
- ★ சிறந்ததொரு தடகள வீராங்கனை.
- ★ 15 வயதுப் பிரிவில் மாவட்ட இரண்டாம் நிலை - நீளம் பாய்தல்.
- ★ மேசைப்பந்து வீராங்கனை.
- ★ பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவின் அங்கத்தவர்.

# விளையாட்டு அரங்கம்

# வானம் தொலைவில் இல்லை

செய்கின்ற காரியங்களைத் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டால், வெற்றிகள் நிச்சயம் என்பதற்கு நல்லதொரு உதாரணம் மாலினி மகாலிங்கம். இவர் லண்டன் சென்று திரும்பியதாயக வலைப்பந்தாட்ட அணியின் ஒரு அங்கத்தவர். மறுபுறம் 2003 க.பொ.த உயர்தர வணிகப் பிரிவில் முதன் முறையிலேயே 3A எடுத்துச் சாதனை புரிந்திருப்பவர்.



மாலினி
"ஆயிரத்தில் ஒருத்தி"

2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அதாவது க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரக் கற்றல் நடைபெற்ற இடைப்பட்ட காலத்தில், விளையாட்டு மற்றும் கற்றல் செயற்பாடு இரண்டிலும் வரையறை செய்துகொண்டு, தன்னை வளர்த்துக் கொண்டவர். 2001 ஆம் ஆண்டு - யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட அணியிலும், வடக்கு - கிழக்கு மாகாண அணியிலும் அங்கத்தவராக இருந்த இவர், அதன்பின் கூடுதலாகக் கல்வியில் நாட்டம் செலுத்துகிறார். இந்தவகையில் 2003 ஆம் ஆண்டு மாசி மாதம் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ தேசிய பெருவிழாவில் கலந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் க.பொ.த உயர்தரப் பரீட்சை சித்திரை மாதத்தில் நடைபெற்றதால். இருந்தும, ஏற்கனவே இவரது வலைப்பந்தாட்டத் திறமை இனங்காணப்பட்டிருந்தமையால், இவ ரது தெரிவும் சாத்தியமாயிற்று.

தனது வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில்-தான் கல்வி பயின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நினைவு கூர்ந்தார். தனது பாடசாலையில் பயின்றுநர் ஜெயந்தி ஜெயதாசன் தன்னை இனங்கண்டு உருவாக்கிவிட, அதன்பின் றொகான், இராஜசிங்கம். பின்னர் கழக நிலையில் திருமதி பேரின்பம்.



மாலினி - அருகில் அதிபர், இருபுறமும் ஆசான்கள்
பல்கலைக் கோவில் யூனியன் கல்லூரி

தொடர்ந்து லண்டன் பயணத்திற்கான பயிற்சியின்போது, ரதிகலா ஆனந்தவடிவேல் - தன்னைப்புடம் போட்டவர்கள் என்கிறார்.

எமது கலந்துரையாடலின் சிறப்பம்சம் - மாலினியின் தாய், தந்தை கலந்துரையாடலில் உற்சாகமாகக் பங்குகொண்டதுதான். ஏனெனில், மாலினியின் தாயார் தனது பாடசாலைக் காலத்தில் சிறந்ததொரு தடகள வீராங்கனை. தந்தை - ஒரு கரப்பந்தாட்ட வீரராக இருந்திருக்கிறார். எனவே, மாலினியின் விளையாட்டுத் திறமை இரத்தத்திலேயே ஊறியிருக்கிறது. அது மட்டுமின்றி, அதிர்ஷ்டவசமாக இவரின் இரண்டு மூத்த சகோதரர்கள்- பார்த்தீபன், வாகீசன் இருவரும் லண்டனில் இருப்பது. அதோடு, தமது தங்கை செய்கின்ற எல்லாக் காரியங்களும் வெற்றிபெற உறுதுணையாக இருப்பது - மாலினிக்கும் பெரும் வாய்ப்பாக இருக்கிறது. இன்னொரு ஒன்று விட்ட சகோதரர் சுவிஸில் இருக்கும் ரஞ்சன்- இவர்மீது மிகவும் அக்கறை கொண்டவராக இருப்பதையும் மகிழ்ச்சியாகக் கூறுகின்றார்.

சிறிது பின்னோக்கிப் பார்த்தால் - மாலினியும் இடம்பெயர் அவலத்தில் சிறுமியாக இருக்கும் போதே பாதிக்கப்பட்டவர்தான். தனது இரண்டாவது வகுப்பில், தான் பிறந்த ஊரான அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இருந்து வெளியேறியவர். பின்னர் கந்தரோடை நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைப் புலமைப்பரிசில் பரீட்சைச் சித்தியுடன் நிறைவு செய்து கொண்டார். அதன் பின்னர், யூனியன் கல்லூரியில் உயர்தரம்வரை பயின்றவர் இவர்.

தனது லண்டன் பயணத்தைப் பற்றிக் கூறும்போது - தமது ஆட்டங்களில், முழு ஈடுபாட்டுடன் பாடுபட்டதையும், ஆனால் மீளவும் தாயகம் திரும்பியபோது புளியங்குளத்தின் ஊடாகத் தாயகத்தினுள் நுழைந்தபோது, அங்கு கண்ட வரவேற்பு தமக்குப் பிரமிப்பைத் தந்ததாகவும், அப்போதுதான் தமது பெருமையின் முழுப்பரிமாணமும் தமக்கு விளங்கியதென்றும் தெரிவித்த மாலினியிடம், நீங்கள் தாயகம் திரும்பியபின் எந்தளவிற்கு அங்கீகரிக்கப்பட்டீர்கள் என்று வினவினோம். கிளிநொச்சியில் தேசியத் தலைவர் எங்களை கௌரவித்தது மகத்தானதொரு நிகழ்ச்சி. அதன்பின், எனது பாடசாலையான யூனியன் கல்லூரி அங்கீகரித்து கௌரவித்தது.

இதனைவிட, வேறு ஏதும் உண்டா என்ற வினாவிற்கு, அப்படி ஏதும் இல்லை என்கிறார் மாலினி. இதில் அவர் ஏதும் ஆதங்கப்பட்டுக் கொள்ளவில்லை. என்றாலும், எமது மனதில் பல விடை காணமுடியாத வினாக்கள் எழுந்தன. என்றாலும், எம்மைக் காப்பவர்கள், நாம் கற்ற பாடசாலை இரண்டு பகுதியின் ஆதரவு மிகப் பொரிதல்லவா?

நாம் இவரை வீட்டில் சந்தித்தபோது, யாழ். நகரில் பயிற்சியை முடித்துக்கொண்டு வீடு திரும்பியிருந்தார். அனுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் - வலைப்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் MIXED வலைபந்தாட்ட அணியில் ஒருவராகிய இவர், அது தொடர்பான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

மாலினி போன்ற உன்னத பிரஜைக்கு - எமது சமுதாயம் தாமாக முன்வந்து நிறையச் செய்யவேண்டியிருக்கிறது. இவர்களுக்குச் சரியான அங்கீகாரம் வழங்கப்பட்டால் மட்டுமே அந்த மகிழ்ச்சியில், நம்பிக்கையில் - எதிர்காலத்தில் நம் இளம் தலைமுறையினர் விளையாட்டிலும், கல்வியிலும் சிறந்து விளங்குவார்கள்.

## கமிலா குணரட்ணம்



கமிலா
"மாவட்டத்தின் நட்சத்திரம்"

மன்னார் - உயிலங்குளம் றோ.க. கல்லூரியில் க.பொ.த உயர்தர கல்வி கற்பவர். இவர் பாடசாலை வலைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனை ஆவார். 15 வயதுப்பிரிவில் 1997, 1998 ஆம் ஆண்டுகளில்- மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் இடம்பெற்ற அணியின் ஒரு வீராங்கனை ஆவார். 17 வயதுப்பிரிவில் 1999, 2000 ஆம் ஆண்டுகளில் 2 ஆம் இடம்பெற்ற அணியினதும் - 2001, 2002 ஆம் ஆண்டில் 19 வயதுப்பிரிவு அணியினதும் ஒரு வீராங்கனையாக விளையாடி, அணியின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கியவர்.

கள்ளிகட்டைக்காட்டு விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர், மன்னார் மாவட்ட அணியில் இடம்பெற்றுப் பலபோட்டிகளில் பங்கு பற்றியவர்.

2002 ஆம் ஆண்டு மாகாணப் போட்டியில் - மன்னார் மாவட்ட அணியில் சிறப்பாக விளையாடி 2 ஆம் இடம்பெற்று, மாகாண அணிக்குத் தெரிவாகி, தேசியப் போட்டியில் பங்கு பற்றியவர். பாடசாலை மட்டத்தில் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றவர்.

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணமட்டப் போட்டியில, மன்னார் மாவட்ட அணிக்காக விளையாடி, அந்த அணி வெற்றிபெறச் செய்தவர்.

## நிர்மலா காத்தமுத்து



நிர்மலா
"தேன் நாட்டின் வெண்ணிலா"

வத்தாறுமூலை மத்திய மகா வித்தியாலத்தில் 2005 க.பொ.த உயர்தர கலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவியாவார். பாடசாலை மட்ட வலைப்பந்தாட்ட அணியல் மட்டுமல்லாது, எல்லே அணியிலும் இடம் பெற்று, அணிக்காகத் திறம்பட விளையாடி, மாவடடத்தில் தனது பாடசாலை அணி வெற்றிபெறவழிவகுத்தவர்.

வானவில் விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர், மட்டக்களப்பு மாவட்ட அணியில் இடம்பெற்று அணிக்காகச் சிறப்புற விளையாடுபவர்.

பாடசாலைமட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் சிறப்புற விளையாடி - 17,19 வயதுப்பிரிவுகளில் மாவட்டமட்டத்தில் வெற்றிபெற்று, மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றிச் சிறப்பாக விளையாடியவர். 19 வயதுப் பிரிவின் அணியின் தலைவியாக இருந்து, மாகாணமட்டத்தில் 3 ஆம் இடம்பெறுவதற்குச் சிறப்பாக விளையாடியவர். எல்லே போட்டியில் மாவட்டச் சாம்பியனாக வந்து, மாகாணமட்டத்தில் சாம்பியனாகத் தெரிவாகி, தேசிய போட்டி யில் பங்குபற்றினார்.

## பூமகள் கந்தசாமி



பூமகள்
"புயலைத் தாங்கும் சக்தி"

அல்வாய் சிறிலங்கா வித்தியாலத்தில் கல்விகற்ற இவர், இடம்பெயர்ந்து முல்லைத்தீவில் வசித்து வருபவர். சுப்பராங் விளையாட்டுக்கழக அங்கத்தவரான இவர், முல்லைத்தீவு மாவட்ட அணியின் தலைவியாகவும் இருந்தவர். 2002 ஆம ஆண்டு மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி, சிறப்பாக விளையாடி, மாகாண அணிக்குத் தெரிவாகித் தேசிய போட்டியிலும் பங்குபற்றினார்.

மெய்வல்லுநர் நிகழ்சிகளில் எறிதல் நிகழ்வில் பங்குபற்றி, மாவட்டமட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்ற இவர், மாகாண மட்டப் போட்டியில் குண்டெறிதல் நிகழ்சியில் 3 ஆம் இடம்பெற்றவர்.

இவர் பாடசாலைகளில் பல விளையாட்டுக்களில் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். பாடசாலை மட்டத்தில் 15, 17,19 வயதுப்பிரிவுகளில் வலைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனை ஆவார். அணிக்குத் தலைவியாக இருந்தார். இவர் தனது பாடசாலையின் விளையாட்டுப் போடடியில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

2003 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப் போட்டியில் - குண்டெறிதல், ஈட்டி எறிதல், முப்பாய்தல் ஆகிய நிகழ்வுகளில் முதலிடம்பெற்று, சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டார். வடக்கு - கிழக்கு மாகாண வலைப்பந்தாட்டப் போட்டியில் - முல்லைத்தீவு மாவட்ட அணிக்காக விளையாடியவர்.

ஆரம்பத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக அங்கத்தவராக இருந்த இவர், மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள் பலவற்றில் வெற்றி பெற்றதுடன், வலைப்பந்தாட்டப் போட்டியிலும் பங்குபற்றிச் சிறப்பாக விளையாடியவர்.

நகுலன்-நிர்மலன்

# கனவென்று நினைத்தேன்

சிறுவர் அரங்கில் குட்டிக் கதையும், ராணி கொமிக்ஷும் வாசிக்கவேண்டியவர்கள்- சர்வதேசக் கிரிக்கெட்டையும், தம்மையும் இணைத்துப் பேசுகிறார்கள். இவர்களில் ஒருவர் சிம்பாப்பே அணியின் உபதலைவர் தைபு, மற்றவர் இந்திய அணியின் வீரர் பார்த்திவ் பட்டேல். இருவரும் அணியின் விக்கெட் காட்பாளர்கள். தற்போது பதினெட்டு வயதாகும் பார்த்திவ் - சர்வதேச கிரிக்கெட் அரங்கினுள் நுழைந்து தனது பதினோராவது வயதில்.

இவர் 2002 ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்ற இந்திய அணியின் இரண்டாம் நிலை விக்கெட் காப்பாளராகவே சென்றார். ஆனால், இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸட் போட்டியில் விளையாடும் பதினொரு பேரில் இவரது பெயர் இருந்து கண்டு, ஆனந்த அதிர்ச்சியடைந்திருப்பார். இருந்தும் இரண்டாவது டெஸடில இறுதிநாள் தன்மீதும் பெரும் சுமை வந்துவிழும் என்று நினைத்திருக்கமாட்டார். ஆனால், இங்கிலாந்து மிகவலுவான நிலையிலும் - இறுதி விக்கெட்டுகள் சிலவற்றைச் சாய்ந்துவிட்டால் வெற்றி என்றநிலையில் நிற்கிறது. இதேவேளை, கங்குலியும் 99. ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க, அந்தவேளையில் மைதானத்தில் நுழைந்த பார்திவ் - ஷாகிர் கானுடன் இணைந்து, இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்களைச் சமாளித்து, அந்த ஆட்டம் சமநிலையில் முடிவடையக் காரணமாக அமைந்தார். பார்த்திவ் மைதானத்தில் நுழையும்போது, பவிலியன் திரும்பிக்கொண்டிருந்த கங்குலி - "வட்டுக்கொடுத்து விடாதே" என்று கூறியதை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார். ரஞ்சிக்கோப்பைக் கிண்ணம் எதிலும்பங்கு கொள்ளாமல், நேரடியாக டெஸ்ட் அரங்கில் நான் நுழைந்தமை பலருக்கு ஆச்சரியமாக இருந்திருக்கலாம். ஆனால், இது என்னால் முடியும் என்ற தன்நம்பிக்கை கொண்டிருந்தேன் என்கிறார் அவர்.



பார்த்திவ் பட்டேல்
"சின்னக்கைகள் பெரியசாதனை"

எனது முதலாவது டெஸ்ட் போட்டியில் நான் சில பிழைகள் விட்டது உண்மை. நான் மேற்கிந்திய அணிக்கு எதிரான போட்டிகளில் நிரம்பத்தேறிவிட்டேன். ஷாகீர்கான், சிறிநாத், கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகியோர் பந்துவீசும்போது, நீங்கள் எவ்வகையில் Adjust செய்துகொள்ளவீர்கள் என்று கேட்டபோது, வேகப்பந்து வீச்சாளர்கள் பொறுத்து பிரச்சினை இல்லை. ஆனால், சுழல் பந்து வீச்சுக்கு Adjust பண்ணவேண்டும். முதல் டெஸ்டுக்கு முன்னர் கும்ளே என்னுடன் ஒரு மணித்தியாலம் செலவிட்டார். அவரது நுட்பங்களைத் தெரிந்து கொண்டமையால்தான், என்னால் இலகுவாக விக்கெட் காப்பினைச் செய்யமுடிந்தது என்கிறார்.

பார்த்திவ் தனது எதிர்காலம் பற்றி மிக நம்பிக்கையுடன் பேசுகிறார். தனது முன்னேற்றம் ஒவ்வொரு ஆட்டரீதியாக அவதானிக்கப்பட்டு அமையும் என்கிறார். நியூசிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளை எதிர்நோக்குவதைப் பற்றிப் பேசிய பார்த்திவ் - நியூசிலாந்தைச் சந்தித்துவிட்டார். இனிச் சந்திக்கப்போவது அவுஸ்திரேலியாவை. அவர்கள் மிகமோசமான வார்த்தையாடல் காரர்கள் அல்லவா? அவர்களை எவ்வாறு சமாளிக்கப்போகிறீர்கள் என்பதற்கு - தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுடன் விளையாடியபோது, வார்த்தையாடல் பற்றி நன்கறிந்துகொண்டேன். எனவே, அவுஸ்திரேலிய அனுபவம் புதிதாக இராது. எனது துடுப்பும், கைக்காப்பும்தான் பதில் சொல்லவேண்டியவையே தவிர, வாயல்ல என்பவர், தான் துடுப்பாட்டத்துறையில் இன்னும் நிறையப் பயிற்சிகள் செய்யவேண்டும் என்கிறார். பதினேழு வயதில் டெஸ்ட் ஆட்டத்தில் காலடி எடுத்துவைத்த வர், பதினெட்டு வயதில் இவ்வளவு பேசுகிறாரே! எவ்வளவு ஆச்சரியம்! - **காயத்திரி.**

# பல்கலையில் வெல்வதும் ஒரு கலை

யாழ்.மாவட்டத்திற்கு, கிரிக்கெட் விளையாட்டினை அறிமுகம் செய்து வைத்த, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்களினால் நடாத்தப்படும் விளையாட்டுக்கழகம்தான் சென்ரலைட்ஸ விளையாட்டுக்கழகம். இவ்விளையாட்டுக் கழகம்தான், யாழ்.மாவட்டத்தில் முதன் முதலில் 50 ஓவர்கள் கொண்ட ஒரு போட்டித் தொடரை நடாத்திய பெருமைக்குரிய மார் வெற்றிக்கிண்ணத்தினை தமதாக்கிக் கொண்டனர்.

இதுவரை - யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளின் 15 இற்கும் மேற்பட்ட வெற்றிக் கிண்ணங்களினை சுவீகரித்துக்கொண்ட பெருமைக்குரிய கழகமாக சென்ரலைட்ஸ்கழகம் திகழ்கின்றது. இந்தக் கழகத்தின் பயிற்சித் திடலாகவும், போட்டிகளினை நடாத்தும் திடலாகவும், யாழ்ப்பா



வெற்றிக் கிண்ணம் பெறும் பல்கலைக்கழக அணித்தலைவர் டொனால்ட் கிண்ணம் உயர்ந்து நிற்கும்

விளையாட்டுக்கழகம்.

மேற்படி போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் புகழ்பூத்த விளையாட்டு வீரனாகிய டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம், தனது 10 ஆவது டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்தினை நடாத்தி. முடித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில், எந்தவிதமான ஊக்குவிப்பும் அற்றநிலையில், பழைய மாணவர்களிடமிருந்தும், நலன்விரும்பிகளிடமிருந்தும், கிடைக்கும் நிதியினைக் கொண்டு, இந்த டொனால்ட் கிண்ணப் போட்டியினைத் தொடர்ந்து சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வருகின்ற பொழுது, சகல போட்டிகளிலும் சிறப்பு ஆட்டக்காரருக்கான விருதுகளை வழங்கி வருகின்றமை போட்டித்தொடரின் சிறப்பம்சமாக உள்ளது.

இந்தவருடம் இந்தக் கழகத்தால், நடாத்தப்பட்ட டொனால்ட் கிண்ணப் போட்டிகள் மிகவும் குறுகிய காலத்தில் திட்ட ணம் மத்திய கல்லூரி மைதானமே காணப்படுகிறது.

சென்ரலைட்ஸ் கழகம் யாழ்.மாவட்ட பாடசாலை கிரிக்கெட்டினை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தினைக் கொண்ட கழகமாகவும் காணப்படுகிறது. யாழ்.மத்திய கல்லூரியின் சார்பாக டொனால்ட் விளையாடிய காலப் பகுதியில், விளையாடிய பற்குணராசா 48 நிமிடங்களில், 100 ஓட்டங்களினை பெற்றமையினை நினைவுகூர்ந்து, வருடா வருடம் யாழ். மாவட்டப் பாடசாலைக் கிரிக்கெட்டில் விரைவான 100 ஓட்டங்களினை பெறும் வீரருக்கு பரிசினையும் வழங்கிவருகின்றது.

இந்த வருடம் அப்பரிசுக்கு தகுதியுடைய கொக்குவில் இந்துக் கல்லூரி வீரன் மதூஷனுக்கு வழங்கப்பட்டமை சிறப்பம்சமாக இருந்தது.

இவ்வாறு - யாழ்.மாவட்டத்தில், கிரிக்கெட் விளையாட்டில், முதன்மை இடத்தினைப் பெற்றிருந்த சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தில் ஏற்பட்ட நிர்வாகப் பிரச்சினை காரணமாக, நீதிமன்றம் வரையில் சென்று, மத்திய கல்லூரியின் புகழ்பூத்த

யாழ். பல்கலைக்கழக, மானிப்பாய் பரிஷ் அணிகள் நல்ல சந்திப்பு



மிட்டு நடாத்தப்பட்டுள்ளமையுடன், யாழ். மாவட்டத்தில் - முதற் தடவையாக ஒரு கழகப்போட்டி, ஒரேநாளில் மூன்று வெவ்வேறு மைதானங்களில், ஒரேநேரத்தில் போட்டியினை நடாத்திய பெருமையும் இநத விளையாட்டு கழகத்தினைச் சார்ந்து நிற்கின்றது. இவ்வருட போட்டிகளில் யாழ். மாவட்டத்தின் 11 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றின. இதில், இறுதிப் போட்டியில், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்தாடி, யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிகொண்டு டொனால்ட் கணேசகு

விளையாட்டு வீரன் எதிர்வீரசிங்கம் எடுத்த முயற்சியின் பயனாக நீதிமன்ற வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு, நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சார்பில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை மட்டும் அனுமதிப்பது என்ற யாழ்.மத்திய கல்லூரி அதிபரின் முடிவுக்கு அமைய, யாழ்.மத்திய கல்லூரி அதிபரின் ஒத்துழைப்புடன், சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சாதனைகள் படைக்க வேண்டும் என்பது, யாழ்.மாவட்டக் கிரிக்கெட் ரசிகர்களினது விருப்பமாகும்.

**- தொகுப்பு சச்சி தவநேசன்**

# அதிர்ச்சிதான்

அகில இலங்கைப் பாடசாலைகள் மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கொழும்பில் நடைபெற்றபோது, ஒரு புதுமையான நிகழ்வொன்று நடந்தேறியுள்ளது. இது உத்தியோக பூர்வமானதல்ல. எனினும், கிரிக்கெட் ஆட்டங்களில் மூன்றாவது நடுவர் பணிபுரிவதற்கு ஒப்பானதாகக் கருதப்பட்டது. தமது பிள்ளைகள் கலந்துகொண்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளை - பெற்றோர்கள் தமது சொந்த வீடியோக்கமராக்கள் மூலம் ஆட்டத்தைப் பதிவுசெய்து, அதில் நடுவர்கள் விட்ட பிழைகளை, உரிய உத்தியோகத்தர்களிடம் காண்பித்திருக்கிறார்கள். இது குறைபாடுகளைக் குறைக்க உதவியுள்ளது என்று, சில பார்வையாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

# என்ன செய்ய

தொடர்ச்சியாகக் காணப்படும் மத்தியஸ்தர் குறைபாடுகள், பக்கச்சார்பு, தகுதியறற மத்தியஸ்தர்கள் கடமையாற்றல், விஷயம் மட்டுமட்டாக உள்ளவர்கள் கடமையாற்றல் என்பனவற்றால் வெறுப்படைந்த பெற்றோர்சமூகமே இப்டியொரு நடவடிக்கையை எடுத்திருக்கிறது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த உத்தியோகத்தர்கள் சிலர், இந்த முறை சில ஆரோக்கியமான முன்னேற்றத்துக்கு வழிவகுத்துள்ளது என்பது உண்மையே. ஆனால், சில பெற்றோர்கள், மத்தியஸ்தர்கள் பக்கச்சார்பாக நடக்கிறார்கள் என்று கூறுவதை ஏற்றுக கொள்ள முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இது நல்லதுதான். 'ஆலையில்லா ஊருககு இலுபபைப பூ சர்க்கரை' என்ற கோதாவின் நடக்கும் சில மத்தியஸ்தர்கள் இனிக் களம் இறங்கும்போது, அக்கம் பக்கம் பார்த்துத்தான் இறங்குவார்கள். அதோடு சிலவேளை இறங்காமலே விட்டுவிடவும்கூடும். இருந்தாலும், அப்படியெல்லாம் இல்லாமல் ஆளுமை நிரம்பிய, சட்டதிட்டங்களை நன்கறிந்த, பக்கச்சார்பற்ற தன்மைகொண்ட மத்தியஸ்தர்களாக இவர்கள் வளரவேண்டும் என்பதே வலைப்பந்தாட்ட வீடியோக்கமராப் பெற்றோரின் விருப்பமாக இருக்கும்.

**- ஜெயா-**

# முதலிடத்துக்கு ஆபத்தில்லை

தற்போதைய கிரிக்கெட் டெஸ்ட் தரவரிசையின்படி 129 புள்ளிகளுடன் முதலிடத்தில் நிற்பது அவுஸ்திரேலியா. இந்தநிலையில், சிம்பாப்வே முதன் முதலாக, அவுஸ்திரேலியாவுடன் டெஸ்ட போட்டிகளில் கலந்துகொண்டுள்ளது. அதேவேளை, இங்கிலாந்து முதன் முதலாகப் பங்களாதேசுடன் டெஸ்ட் போட்டிகளில் ஆடிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது டெஸ்ட் வரிசையில், இரண்டாம் தர நிலையில் இருப்பது தென்னாபிரிக்கா, முன்றாம் நிலையிலிருப்பது நியூசிலாந்து. அடுத்தது இங்கிலாந்து. இந்த நிலையில், இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்த நிலையில், எதிர்பார்ப்பது போல இங்கிலாந்து பங்களாதேசை வென்றால், தரவரிசையில் நியூசிலாந்தைப் பின்தள்ளி, இங்கிலாந்து மூன்றாவது இடத்துக்கு முன்னேறி விடும்.

2001 இல் டெஸ்ட் தரவரிசையில், இங்கிலாந்து மூன்றாம் இடத்தில் இருந்தாலும், 2001 இல் இலங்கை இங்கிலாந்தை மேவி, இங்கிலாந்து நான்காம் அல்லது ஐந்தாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டது. தற்போதைய தரவரிசைப்படி, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே, பங்காளதேஷ் என்ற வகையில் 'டெஸ்ட்' விளையாடும் நாடுகள் அமைகின்றன. இதில், மேற்கிந்தியத்தீவுகளும், இலங்கையும் தம்மை மீண்டும் நிரூபித்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றன.

# சச்சினுக்குக் காலமுண்டு

டெஸ்ட் கிரிக்கெட் உலகின் எதிர்பார்க்கையெல்லாம், தற்போது சச்சின் டென்டுல்கர் பற்றியதுதான். ஏனெனில், சச்சின் இன்னும் நான்கு சதங்கள் போட்டால், உலகின் அதிகூடிய டெஸ்ட் சதங்கள் பெற்றவர் என்ற பெருமையை ஸ்ரீவ்வோவின் முப்பத்திரண்டு சதங்களைத் தாண்டி, கவாஸ்கரின் முப்பத்து நான்கு சதங்களைத் தாண்டி முன்னிலை வகிப்பார். ஆனால், நியூசிலாந்துடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளும், சச்சினுக்கு வாய்க்காதது துரதிஸ்டம். இருந்தாலும், சச்சின் ஏதோ ஒரு வகையில் சாதனைகளைத் தாண்டி, முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார் என்பதே உண்மை.



கடந்தவாரம் நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - தனது நூற்றி ஏழாவது டெஸ்டில் விளையாடியபோது, டெஸ்ட் ஆட்டங்களில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர்களின் - ஐந்தாவது வரிசையில் தன் பெயரைப் பதித்துக் கொண்டார். தற்போதைய ஓட்ட எண்ணிக்கையின்படி, முதன்மை நிலையில் 11,174 ஓட்டங்களுடன் அவுஸ்திரேலியாவின் அலன்போர்டரும், அடுத்து ஸ்ரீவ்வோ 10,660 ஓட்டங்களுடனும், கவாஸ்கர் 10122 ஓட்டங்களுடனும், இங்கிலாந்தின் கிரஹம்கூச் 8900 ஓட்டங்களுடனும், சச்சின் 8849 ஓட்டங்களுடனும் காணப்படுகிறார்கள்.

## சச்சின் சாதனை எல்லாம் நானே வைச்சுக்கலாமா

இதேவேளை, சச்சின் தவிர, இப்போது களத்தில் உள்ளவர் ஸ்ரீவ்வோ மட்டுமே. சச்சின் டெஸ்ட் ஓட்டங்களில் முதன்மைநிலை பெறுவாரோ என்னவோ 314 ஒருநாள் போட்டிகளில் 12,219 ஓட்டங்கள், மற்றும் 34 சதங்களுடன் சச்சின் முதலிடம் வகிக்கின்றார்.

**-சரண்யன் -**

# கிராமத்துக் கிளி



தாரணி எனது கைகளும் சின்னவைதான்

கிளிநொச்சி - அக்கராயன்குளம் மகா வித்தியாலய மாணவி தாரணி சீவரட்ணம். இவரது விளையாட்டுத்துறைச் சாதனையைப் பாராட்டியுள்ளார்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர். தாரணி, கடந்த மாதம் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தடகளப்போட்டிகளில் சோபித்திருக்கிறார்.

15 வயதிற்குட்பட்ட பிரிவில் பரிதிவட்டம் வீசுதலில் இரண்டாம் இடத்தையும், குண்டெறிதல் நிகழ்வில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்ற தாயகப்போட்டிகளில் குண்டெறிதலில் முதலாம் இடம் இவருக்குரியதாயிற்று. இவரது தாயகச் சாதனைகள்மூலம் பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள். பதக்கங்கள் ஏராளம். தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சையிலும் வெற்றிகண்ட இவர், திறமையான மாணவியும்கூட.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
*உயற்பாலது அன்றிக் கெடும்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### நமது கலை - ரசனையுணர்வை நாம் இழந்து வருகின்றோமா?

கலாசாரமற்ற அல்லது கலாசாரத்தை இழந்த இனம், மந்த புத்தியுள்ள இனம் என்று கூறுவார்கள். தமிழன் கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி, மூத்த குடியின் கலாசார பாரம்பரியத்தின் வழிவந்தவன் என்றும் கூறுவார்கள். அதாவது, உலகின் முதன்மைக்கலாசாரத்தின் மூலவேரில் இருந்து எழுச்சி கண்ட இனம் தமிழினம் என்பதே அந்த கூற்றின் அர்த்தமாகும்.

இதேவேளை, யாழப்பாணத் தமிழன் கந்தபுராண கலாசாரத்தின் வாரிசு எனப் பெருமிதமாகக் கூறிவரும் இனத்தைச் சேர்ந்தவன் என்ற ஆன்மீகப் பண்புடன் ஒன்றிணைந்த வாழ்வையுடையவன் என, எல்லோரும் கூறிப் புகழ்வதுமுண்டு. எப்போதுமே, கல்வியையே தனது மூல பலமாக மட்டுமல்ல, மூலவளமாகவும் கொண்ட அறிவு சார்ந்த கலாசார பெருமையையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டவனும் தமிழன்தான்.

இப்படியெல்லாம் நினைக்கும்போது நெஞ்சில் எழும் புளகாங்கித உணர்வை உணர்ந்துதான் புரிந்துகொள்ள முடியும். ஒரு காலத்தில் ஈழத்தமிழன் என்றால், அவன் உன்னதமான தமிழ் மொழியை உயிர்த்துடிப்புடன் தேமதுரத் தமிழாக உச்சரிப்பவன் என்று, பெருமையுடன் கூறப்படுபவனாக இருந்தான்.

'ஈழத்தமிழ்' - தமிழின் உயிர்த்துடிப்பை, ஜீவனுடன் இயங்கவைக்கும் ஒலியசைவைக் கொண்டதாகவும் இருந்தது. ஈழத்தமிழனின் ரசனையும், கலையுணர்வும்- கலையை, கலைஞர்களை மதிக்கும் உயர்வான பண்பாடும், உலகத்தவரால் பெருமளவில் மதிக்கப்படும் தன்மை இன்னமும் இருக்கிறது. இசையுடன் இணைந்த தேசம் ஈழதேசம். அதுவும், வீணையைக் கொடியாகக் கொண்ட இசைஞானி இராவணன் ஆண்ட மண் இதுவாகும். இந்த மண்ணுக்கும் இசைக்குமான உறவு, லயம் பிசகாத உறவு.

'லயஞானகுபேர பூபதி' என்ற இணையற்ற பட்டத்திற்குரிய தவில் மேதை தட்சணாமூர்த்திப்பிள்ளையை உலகுக்களித்த உன்னத மண்- யாழ் என்ற இசைக்கருவியையும் பாணன் என்ற இசைஞனையும் இணைத்து உருவான யாழ்ப்பாணம் என்ற பெயரைக் கொண்ட பெருமைக்குரியது.

வடக்கில் யாழிசை ஒலிக்குமென்றால் கிழக்கில் மீனிசை பாடும். கிழக்கு மீன்கூடப் பாடும் மிடுக்குடைய நாடு என்பார் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.

இத்தகைய பெருமைக்குரிய கலாபூமியான - தமிழர் தேசத்தில், அண்மைக் காலத்தில் ஏதோவோர் நச்சுக் கலாசார - கலை ஊடுருவல் எப்படியோ நடந்துவிட்ட உணர்வு மனதை என்னவோ செய்கிறது.

இந்த ஊடுருவலின் தன்மை குறித்து, அதிகம் விளக்க வேண்டியதில்லை.

எப்படி உன்னதமான கலைகளின் உறைவிடமாக தமிழகம் விளங்குகின்றதோ, அதேபோல் - தமிழை, தமிழ் கலாசாரத்தை, கலையுணர்வை சீரழிக்கும் நச்சுக் கலாசாரம் விளையும் மண்ணாகவும் அதுவே விளங்குகின்றது. இதில், தமிழ் சினிமா வகிக்கும் பங்குபற்றி நாம் கூறவேண்டிய அவசியமில்லை. நீங்களே புரிந்துகொள்வீர்கள்.

இந்த நச்சுக் கலாசார ஊடுருவல் நம்மண்ணையும் மக்களையும் வெகுவாகப் பாதிப்பதுதான் கவலை தரும் விடயம்.

நேற்றுமுன்தினம் தமிழக வயலின் மேதை பெருமதிப்பிற்குரிய குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசைவெள்ளம் நல்லூரில் பெருக்கெடுத்தோடியது.

ரசனையுணர்வும், இசை ஞானமும், கலாபூர்வமான பிரக்ஞையும் கொண்ட ஆயிரக்கணக்கானோர் அந்த இசை வெள்ளத்தில் மூழ்கி திழைக்க அங்கே கூடியிருந்தனர். அது பெருமைக்குரிய விடயம். நமது பண்பாடு அதில் பேணப்பட்டது நிறைவு தரும் விடயம்.

ஆனால், அந்த இசை நிகழ்வு நடந்த சூழலை ஒரு களியாட்ட விழா மையமாக, பொழுதுபோக்கு மைதானமாக வியாபாரத் திடலாக சிலர் மாற்றியதுதான் மிகமோசமான விடயமாகும்.

உன்னதமான இசையை ரசிக்க குழுமியுள்ள மக்களின் இசையுணர்வை இந்த புறச்சூழல் வெகுவாகப் பாதிக்கவே செய்தது.

ஒரு சாரார் இசை நிகழ்ச்சி நடக்கும் வேளையில், அதில் எந்த வித ஈடுபாடுமின்றி, ஏனையோருக்கு இடையூறாக பெருத்த குரலில் பம்பலடித்துக் கொண்டிருந்ததுதான் அசிங்கமான விடயமாகும்.

சிலர் கலையை அரசியலாக்குகின்றனர். சிலர் பொழுதுபோக்காக்குகின்றனர். சிலர் கேளிக்கை விடயமாக்குகின்றனர். சிலர் தமது பல்வேறு கலாசாரமற்ற செய்கைகள் மூலம் அவமதிக்கின்றனர்.

இது, கலை - கலாசார - பண்பாட்டு - பாரம்பரியமிக்க தமது இனத்திற்கு, அவமானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை என்பதை அவர்கள் ஏனோ புரிந்துகொள்ளத் தவறிவிடுகின்றனர்.

இதுவே வேதனை தரும் விடயம்.

எமது ரசனையை, கலையுணர்வை நாம் தொலைத்து வருகின்றோமா என்ற ஏக்கம் ஏற்படவே செய்கிறது.

இது குறித்து, நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டியது அவசியம். இல்லையேல், நம் கலையுணர்வின் தனித்துவ பெருமைகளை நாம் இழக்கும் அவலம் ஏற்பட நேரிடலாம்.

## நாடும் நடப்பும்




# சிலாபத்தில் ஆறு வீடுகளுக்குத் தீ வைப்பு; பொ.ஐ.மு., ஐ.தே.மு. பரஸ்பரம் குற்றச்சாட்டு

சிலாபத்திலுள்ள ஆராய்ச்சிக்கட்டுவ என்னும் இடத்தில் ஆறு வீடுகள் தீப்பிடித்துள்ளன. இவற்றில் நான்கு வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவத்துக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியே காரணமென ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியே காரணமென பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணி நடத்துகின்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் மீது ஆத்திரத்தில் ஐக்கிய தேசிய முன்னணியினர், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களின் வீடுகளைத் தீக்கிரையாக்கியுள்ளனர் என பொதுஜன ஐக்கிய முன்னணி கூறியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கெதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ளாத பொதுமக்களின் சிலரின் வீடுகளே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆறு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். மற்றைய மூவரும் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# அரசாங்கத்தின் சமாதான முயற்சி நிரந்தர அமைதியை ஏற்படுத்தும்!

## நம்பிக்கை தெரிவிக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் - நாட்டில் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

அரசாங்க அபிவிருத்தி முயற்சிகள் குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக, நேற்றுக் காலை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்வதற்கு பல திட்டங்கள் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், அவற்றுள் துறைமுக அமைப்பு, விமானநிலைய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் அடங்கும் என்றும் குறிப்பிட்டார்.

## வியாழன் அன்று கிளிநொச்சி வந்த

# மகளிர் விவகார உபகுழுவின் ஆலோசகர் பெண்களின் பிரச்சினை குறித்து ஆராய்வு!

மகளிர் விவகார உபகுழுவின் ஆலோசகர் கலாநிதி ஆங்கிட் என்.ஹெய்பேர்க்கும், நோர்வே தூதரக அதிகாரி அஜெஸ்ரியும் - கிளிநொச்சியிலுள்ள மகளிர் விவகார செயலகத்துக்குக் கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்து, பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடல்களை நடத்தினர்.

முன்னதாக, ஒஸ்லோ பல்கலைக்கழக பேராசிரியரான கலாநிதி ஹெய்பேர்கை - விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பெறுப்பாளர் தமிழினி வரவேற்றார்.

இதையடுத்து நடைபெற்ற கலந்துறையாடலில் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் விவகார உபகுழுப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில், இராணுவ நடவடிக்கைகளால் பெண்கள் எதிர்கொண்ட பாதிப்புக்கள் குறித்தும், போரினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும், இடப்பெயர்வுகளால் தொடரும் பிரச்சினைகள், நெருக்கடிகள் குறித்தும், உயர்பாதுகாப்பு வலயங்களால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள் - பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நடத்தப்படும் - பெண்களுக்கான பயிற்சி நிலையத்துக்கும் விஜயம் செய்தனர்.

அத்துடன், இந்தக் குழுவினர் - மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களைப் பராமரிக்கும், வெற்றிமனை இல்லத்துக்கும் விஜயம் செய்து, அங்குள்ள பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

இதையடுத்து, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினியையும், பின்னர் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர்களையும் - கலாநிதி ஹெய்பேர்க் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தினார்.

## இரண்டு வாரங்களில் மட்டும்

# இராணுவத்திலிருந்து தப்பியோடிய 1,173 பேருக்கு விலகல் சான்றிதழ்!

(கொழும்பு)

தப்பியோடிய படையினருக்கு விலகல் சான்றிதழ் வழங்கும்திட்டம் கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த புதனன்று ஆரம்பமான இந்தப் பணிகளில் இரண்டு நாட்களில் மட்டும் 1173 தப்பியோடிய படையினர் விலகல் சான்றிதழ் பெற விண்ணப்பித்திருப்பதாக அலுவலகப் பேச்சாளர் சீகனால் தமேத பெரேரா தெரிவித்தார்.

இவர்களில் 247 பேருக்கு விலகல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது, அந்தக் கட்சியின் முன்னாள் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவை ஆதரவாளர்கள் தூக்கி குதூகலிக்கும் காட்சியைக் காணலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அடுத்த வாரம் அரசாங்கத்தின் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகப் பரிந்துரைக்கான பதில் பரிந்துரையைக் கையளிக்க இருக்கின்றனர். இது தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் மிகவும் எதிர் பார்க்கப்படும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கப் போகும் பரிந்துரைகள் - நிச்சயம் அரசாங்கம் எதிர்பார்ப்பதைப் போன்றே, இலங்கையின் அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும் என நம்பப்படுகிறது.

ஆனால், அரசாங்கத்தினால் அதனை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கமுடியாது. அவ்வாறான ஒரு சிக்கலான சூழ்நிலை தற்சமயம் எழுந்துள்ளது. வழமையாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மாறிமாறி கடிதங்களையும், அவற்றுக்கான பதில்க் கடிதங்களையும் எழுதி வந்தனர். இவை மக்கள் மத்தியில் பேச்சு வார்த்தை மீண்டும் ஆரம்பிக்காதோ என்ற உணர்வை ஏற்படுத்தியது. ஆனால், சர்வதேச உதவியுடன் இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பபட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதியாக அரசாங்கத்தின் பரிந்துரையை விமர்சித்துப் பதில் அனுப்பிய வேளையில், சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன்கூடிய தெம்பூட்டல் ரணிலுக்குக் கிடைத்தது. இதனடிப்படையில்தான் அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் பரிந்துரை - அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டு இருந்தாலும், அதனைப் பரிசீலிக்கத் தயார் எனக் குறிப்பிட்டிருந்தார். இதனை அடுத்தே, தமிழீழ விடுதலைப்

இல்லை என அரசாங்கம் கூறியிருந்தது. போர் நிறுத்த உடன்பாடு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி என்பதால், யுத்தம் ஓய்ந்துவிட்டது என்ற எண்ணத்துடன் இருந்த அரசாங்க ஊழியர்கள், இதனைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால், இன்று நிலமை மாறியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாது என அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும், சர்வதேசமும் அடிக்கடி கூறிவருகின்றன. எனவே, அரசாங்க ஊழியர்களிடமிருந்து வந்த யுத்தபீதி அகன்றுவிட்டது. அவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்த தொடங்கிவிட்டார்கள்.

கடந்த ஆறு மாதகாலப்பகுதியில் - அரசாங்கத்துக்குத் தலை நிமிரமுடியாத பிரச்சினைகள். இதில் முக்கியமான பிரச்சினைகள்- அரசாங்கத்துறை ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களிலும், வேலைநிறுத்தத்திலும் ஈடுபட்டமையாகும். அரசாங்க ஊழியர்களைத் திருப்திப்படுத்த அரசாங்கம் முன்னர் குறுகியகால நியமனத்துடன்கூடிய உறுதிமொழிகளை வழங்கி வந்தது. ஆனால், அவையாவும் செயலிழந்து போயுள்ளன. இதனையடுத்து, அரசாங்கம் கூடியகால நியமனம் ஒன்றை விதித்தது. அதுதான் வரவு - செலவுத்திட்டமாகும். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங் ஊழியர்களுக்கு ஐம்பது வீத சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்பதே அனைவரது கோரிக்கையாக இருந்தது. ஜனாதிபதிக்கு - அரசாங்கத்தின் முழு நிதி விடயங்களும் தெரிந்திருந்த போதும், அவரிடம்கூட தமது அரசியல் வியூகம் என்ற அடிப்படையில் அரசாங்க ஊழியர்களுக்கு ஐம்பதுவீத சம்பள உயர்வு

கத்தை மேலும் சிக்கல் நிலைக்கேகொண்டு சென்றுவிட்டது.

இந்தியாவின் எதிர்பார்ப்பு - இலங்கைப் பிரச்சினை இலங்கையின் மத்திய அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தவே செய்திருக்



கின்றன.

இந்தியா பல காரணங்களால், இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுவதைக்

கட்சிக்கு, முக்கியமாக ஜனாதிபதிக்கு தலையிடியைக் கொடுத்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் - புத்திரசிகாமணி செய்தது சரியோ, பிழையோ என்பதற்கு அப்பால், இந்துக்களும் தமது

மதக் கொள்கையில் பிடிப்பாகவே இருக்கின்றனர் என்பதை உணர்த்தியுள்ளது. பலரது கோரிக்கைகளையும் செவிமடுக்காத ஜனாதிபதி, இந்த நடவடிக்கையின்மூலம் அதிர்ந்து போய்விட்டார். இந்து மக்கள் பிரதிநிதிகளைக் காட்டிலும், இந்தமுறை இஸ்லாமிய பிரதிநிதிகளே தீபாவளித்தினத்தில் பேரணி நடத்தக் கூடாதென வலியுறுத்தினர். இதனை ஜனாதிபதி செவிமடுத்திருந்தால் அவருக்கு இரட்டை வெற்றி காத்திருந்தது.

ஆனால், அவர் நினைத்ததற்கு மாறாக, இரட்டைத் தோல்வியையே சந்தித்துள்ளார்.

ஒன்று - இந்து மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளார். இரண்டாவதாக - பத்து இலட்சம் பேரை பேரணிக்குத் திரட்டப்போவதாகக் கூறிய அவருக்கு, ஒரு இலட்சம் பேர் என்ற தொகையைக்கூட எட்டமுடியாமல் போய்விட்டது.

கடந்த வாரத்தில் தென்னிலங்கையில் இடம்பெற்ற மூன்று முக்கிய முறுகல் நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இதில் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து, புத்திரசிகாமணியைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆசனத்திற்கு அழைத்துச் செல்வதில் அமைச்சர் ரவி கருணாநாயக்க வெற்றி கண்டமை - முதலாவது நிகழ்வாகும்.

எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தின் போது, அரசாங்கத்தைத் தோல்வியடையச் செய்ய பொதுஜன ஐக்கிய முன்னணி முயற்சித்ததால், அதற்கு முந்திக்கொண்டு அந்த முன்னணியைச் செயலிழக்கச் செய்யும் வகையில், ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட முயற்சிகளே இதுவாகும்.

இதன்மூலம் தமது தரப்பிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எவரும் தாவமாட்டார்களென, ஐக்கிய தேசிய முன்னணி அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

கடந்த அமைச்சரவையில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம், கடந்த வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது முறுகல் நிகழ்வாகும்

மகாபொல நிதியத்துக்கு - அபிவிருத்தி லொத்தர் நிதியத்திலிருந்து உரிய நிதிகள் அதாவது, 50 வீத நிதிகள் கிடைக்கவில்லையென, ரவி கருணாநாயக்க குறிப்பிட்ட பின்னரே இந்த முறுகல் ஏற்பட்டது. இதன்போது, ஜனாதிபதி தமது வழமையான பாணியில் ரவி கருணாநாயக்கவைக் கண்டித்துள்ளார்.

# புலிகளின் திட்டவரைபும்

புலிகளும், அனுபவம் வாய்ந்த (அரசியலில்) தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பார்த்துக் கொண்டிருக்க, சர்வதேசத்தின் கவனத்தைத் திருப்பும் வண்ணம், தமது திட்டவரைபைத்

வழங்கப்படவேண்டும் என்ற பரிந்துரையைச் செய்துள்ளார். அரசாங்கத்துக்கு தற்சமயம் தர்மசங்கடமான நிலையை அது எதிர்நோக்கியுள்ளது. இன்னமும் அரசால் சமாதான



தயாரித்தனர். எந்த ஒரு இடத்திலும் அரசாங்கம் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்தேயாகவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டுடன், இந்தப் பரிந்துரை தயாரிக்கப்பட்டுள்ளதாகவே எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு பரிந்துரை சமர்ப்பிக்கப்படவிருப்பதால், இலங்கையில் அடுத்தவாரம்- நிச்சயமாக எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் வாரமாக மாறியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பரிந்துரையைச் சமர்ப்பித்தாலும், அரசாங்கம் அதற்கு உடனடியாகப் பதிலை அனுப்பாது என்பதன் காரணமாக, இப்போதைக்கு இரண்டு தரப்புக்கும் இடையில் பாரிய இராஜதந்திர மோதல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு நகர்வுகள் ஒரு மாதத்தினால் ஸ்தம்பிக்கப் போகின்றன. நவம்பர் மாதம் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், முக்கியமான மாதமாகும். தமது இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை அரசாங்கம் இந்த மாதத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறது. சமர்ப்பிக்கப்படும் வரவு-

முன்னகர்வை முனைப்பாகக்கொண்டே, தமது பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முனைந்துகொண்டிருக்கின்றது. இதனடிப்படையில் ஜப்பான் - ரோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு சர்வதேச சமூகம் தருவதாக

கொண்டு, எதிர்க்கட்சிகள் குறிப்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, பௌத்த கட்சியான சிஹல உறுமய என்பன - தமது அரசியலைக் கொண்டுசெல்வதற்கு, இந்திய சார்புக்கொள்கையைக் கடைப்பிடித்தும் வந்தன. இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலுக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வந்தது. ரணில் விக்கிரமசிங்க - மேற்கத்தேய நாடுகளின் உதவிகளைப் பெற்று வருகிறார். இந்தியாவைப் பொருட்படுத்தவில்லை. எனவே, அது இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலைத் தரப்போகிறது என்ற எண்ணப்பாடுகளை எதிர்க்கட்சிகள் தெரிவித்து வந்தன. இதன்மூலம், நாம் இந்தியச் சார்பு கட்சிகள் என இவை தம்மை இனங்காட்டிக்கொண்டன. இவர்களின் கனவு தற்சமயம் ஓரளவு நனவாகியுள்ளது.

முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் - இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் திறந்தகொள்கையொன்றை வெளியிடாமல் இருந்து வந்த இந்தியா - ஏனைய மேற்குலக நாடுகள் - இலங்கையைப் பயன்படுத்தினால், பிராந்திய வல்லரசு என்ற தமது கீர்த்திக்குப் பங்கம் விளைந்துவிடக் கூடும் என்ற ஐயம் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிட்டது. எனவேதான், அவசரமான சில நகர்வுகள்மூலம் இந்தியா ஒரு வார காலப்பகுதிக்குள் உடன்படிக்கையொன்றினை செய்துகொண்டது.

இந்தியாவுடன், இலங்கை செய்து கொண்டுள்ள வர்த்தக, பொருளாதார உடன்படிக்கை- நிச்சயம் இலங்கையின் அனைத்து விடயங்களிலும் அந்த நாடும் அக்கறை கொள்கிறது என்ற நிலைமைய ஏற்படுத்திவிட்டது. இதுவரை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் மௌனம் கடைப்பிடித்து வந்த இந்தியா - தற்சமயம் தீர்வுவிடயம் தொடர்பிலும் தமது

# தென்னிலங்கை சலசலப்பும்

உறுதியளித்த 40 பில்லியன் அமெரிக்க டெலர்களை, அரசாங்கம் மிகவும் சிரத்தையுடன் பெற்றுக்கொள்ள முயற்சித்து வருகின்றது. இந்த நிதியுதவிகள்மூலம் பொருளாதார நெருக்கடிநிலைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. தற்சமயம் இந்த உதவியளிக்கும் நாடுகளில் இந்தியாவும் இணைந்திருப்பது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்குப் புதிய

கருத்தை உறுதியாகக் கூறியுள்ளது. இது இலங்கையில் - இந்தியச் சார்புக்கட்சிகளாகத் தம்மைத்தாமே பிரகடனம் செய்துகொண்ட கட்சிகளை யோசிக்க வைத்துள்ளது.

இந்தியாவின் தலையீடு - தமது நகர்த்தலின்மூலம் வந்திருந்தால், அது தமது எதிர்ப்பை அரசியல் நகர்வுகளுக்கு உதவியளித்திருக்கும் என, இந்தக்கட்சிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளன. இந்த நிலையில், இந்துக்களின் 2003 ஆம் ஆண்டு தீபாவளிப் பெருநாள் - இலங்கையின் அரசியல் வரலாற்றில் பேசப்படும் விடயமாக மாறிவிட்டது. தீபாவளித்தினத்தன்று, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமது அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியமையால், அந்தக் கட்சி - இனவாதக் கட்சி என்ற பகுதிக்குள் நேரடியாகச் சென்று வீழ்ந்த நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் தீவிர உறுப்பினராக இருந்து, அதில் வாய்ப்பு வழங்கப்படாமையால், பொதுஜன ஐக்கிய முன்னணியில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட வி.புத்திரசிகாமணி - தீபாவளித் தினத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொள்ளும் - அரசாங்க எதிர்ப்புப் பேரணிக்கு ஆட்சேபம தெரிவித்து, நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆசனத்தில் அமர்ந்தமை - சிறிலங்க சுதந்திரக்

ரவி கருணாநாயக்க - அபிவிருத்தி லொத்தர் நிதியைப் பெற்று கட்டடமொன்றை நிர்மாணித்து வருதாக ஜனாதிபதி குற்றம் சாட்டிய போது, அமைச்சர் ரவி கருணாநாயக்க அந்தக் கட்டடம் அமைப்பது குறித்து, ஜனாதிபதியின் பொதுஜன முன்னணி ஆட்சியின்போதே அதிகாரங்கள் வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி - ஜனாதிபதிக்கு நடைமுறையில் எதுவும் தெரியாதெனக் குற்றம் சுமத்தினார். இதனை எதிர்பாராத ஜனாதிபதி, அதிர்ச்சியுற்றரவாக ரவி கருணாநாயக்கவை நோக்கி கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தினார். ஆனால், ரவி கருணாநாயக்காவினால் பதவி என்றநிலை காரணமாக ஜனாதிபதியை நோக்கி கடுமையான வார்த்தைகளைப் பிரயோகிக்க முடியவில்லை. இந்த நிலையில், பிரதமர் தலையிட்டுப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

மூன்றாவது முறுகல் - அமைச்சர் மகிந்த விஜயசேகராவுக்கும், பொதுஜன ஐக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீரவுக்கும் இடையில் இடம்பெற்றது. நீரியல் வள அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது, இவர்கள் இருவரும் ஊடகங்களில் வெளியிடமுடியாத அளவில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## தெற்கு திசையினிலே

## கொழும்பிலிருந்து இந்திரஜித்

செலவுத் திட்டம், மிகவும் நுணுக்கமாகச் செய்யப்பட்ட ஒன்றாகும். ஏன்னெனில், அரசாங்கத்துக்குத் தம்மை மக்கள் மத்தியில் மீண்டும் நிலைநிறுத்திக் கொள்வதற்கு, இந்த வரவு- செலவுத்திட்டமே உறுதியளிக்கவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்குக் கடந்த வரவு- செலவுத்திட்டத்தில் நிவாரணம் வழங்கப்படவில்லை. அதாவது, சம்பள உயர்வுகள் எதுவும் வழங்கப்பட'வில்லை. நாட்டின் பொருளாதாரம் வீழ்சியடைந்திருப்பதால், இதற்கு வாய்ப்பு

தென்பை ஏற்படுததியுள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கு திருப்தியான சம்பள உயர்வை அரசாங்கம் வழங்கவேண்டியநிலையில் இருக்கின்றபோதும், திறைசேரி அதற்கு இன்னமும் பூரண ஒத்துழைப்பை வழங்கவில்லை. சம்பள உயர்வை ஒரேயடியாக வழங்காமல், பொருளாதார அபிவிருத்திக்கேற்ப மூன்று கட்டங்களாகச் சம்பள உயர்வுகளைச் செயற படுத்தலாமா எனத் திறைசேரி ஆலோசனை செய்துவருகின்றது. ஆனால், அது அரசாங்

## இந்தியாவின் இறைமைக்கு எதிராக
# தீவிரவாதிகளுடன் பேசப்போவதில்லை
# துணைப் பிரதமர் அத்வானி தெரிவிப்பு!



காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கென, இந்தியாவின் உதவிப் பிரதமர் அத்வானி அண்மையில் நியமிக்கப்பட்டார்.

காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்போது- இந்தியாவின் ஒற்றுமைக்கும், இறைமைக்கும் எதிராக தீவிரவாதிகளுடன் சமரசத்தில் ஈடுபடப்போவதில்லை என அத்வானி தெரிவித்தார்.

மென்போக்குக்கொண்ட தீவிரவாதக் குழுக்கள் டெல்கியில் பொது மக்களின் கருத்துகளை அறிய முற்பட்டுள்ளார்கள்.

அதே நேரத்தில் -

கடும்போக்குக் கொண்ட தீவிரவாதக் குழுக்கள் அத்வானியின் கருத்திற்கு ஆதரவு கொடுப்பதற்கு மறுத்துள்ளார்கள். வெள்ளிக்கிழமை இந்திய துருப்புக்கள் மத்தியில் உரையாடும்போது, அதிகாரப்பகிர்வையே இந்தியா விரும்புவதாக அத்வானி தெரிவித்திருந்தார். கூடிய அதிகாரங்களை காஷ்மீருக்கு கொடுப்பதற்கு - இந்தியா முயற்சி செய்துவருவதாகவும், சொல்லப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடன் காஷ்மீர இணைவதற்கு இந்தியா அனுமதிக்கப் போவதில்லை எனவும், அத்வானி தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரின் எதிர்க்கட்சித் தலைவர், ஒமர் அப்துல்லா, மென்போக்குக் கொண்ட தீவிரவாதிகளையே பேச்சுவார்த்தைக்கு அழைக்க அத்வானி விரும்புவது போன்றுள்ளது எனத் தெரிவித்தார்.

இதன் மூலம் அந்தத் தீவரவாதக் குழுக்களின் தலைவர்களுக்கு ஆபத்தை உண்டாக்குவதற்கு இந்தியா முயற்சிப்பதாகவும் - குற்றம் சுமத்தியுள்ளார்.

# பக்தாத்தில் குண்டு வெடிப்பு; 3 அமெரிக்கப் படையினர் காயம்



(பக்தாத்)

பக்தாத்தில் நேற்றுக்காலை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினர் பாதையோரத்தில் காணப்பட்ட குண்டொன்று வெடித்ததில் மூன்று படையினர் காயமடைந்தார். இந்தக் குண்டு தன்னியக்கக் கட்டுப்பாட்டினால் வெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈராக் மீது அமெரிக்காவினால் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலின் பின் இதுவரை 108 அமெரிக்கப் போர் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## நியூஸிலாந்து 'மவுன்குக்' மலையில் ஏறியோர் குளிரால் பாதிப்பு

நியூஸிலாந்தின் உயர்ந்த மலையான மவுன்குக்கில் பிரித்தானிய மலைஏறிகளான "யோனிகுக்" ஸ்ரெப்பன் றொபட் ஆகிய இருவரும் ஏறி அங்கு பனிப்புயலில் சிக்கி கடும் குளிரால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்- பாதுகாப்பாக காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் - நியூஸிலாந்து பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். காலநிலை சீரடைந்த பின் இவர்கள் உலங்கு வானூர்திகள்மூலம், காப்பாற்றப் பட்டு மலை அடி வாரத்தில் அமைந்த தற்காலிக கூடாரத்தில் வைத்திய சிகிச்சை நடைபெறுவதாகவும், நியூஸிலாந்து பொலிஸார் தெரிவித்தனர்.

12, 349 அடி உயரமான இம்மலை தலைநகர் வெலிங்டனில் இருந்து 500 மைல்களுக்கு வெளியே அமைந்துள்ளது. இதுவரை 180 பேர்வரை இம் மலையில் ஏறும் முயற்சியில் ஈடுபட்டு மரணம் அடைந்துள்ளார்கள்.

# உலக நோக்கு

## சர்வதேச நாடுகளால்
# ஈராக்கின் புனரமைப்பிற்கு 33 பில்லியன் டொலர் உதவி

சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் 33 பில்லியன் டொலர்களை நிதி உதவியாகவும், கடனாகவும் ஈராக்கின் புனர்நிர்மாணத்திற்கு வழங்க முன்வந்துள்ளன. இவற்றை நான்கு ஆண்டுகளில் கொடுத்து முடிப்பதற்கு உலக நாடுகள் திட்டமிட்டுள்ளன. இத்தொகை ஆரம்பத்தில் அமெரிக்கா எதிர்பார்த்ததை விட கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவிற்கு அடுத்ததாக ஜப்பான் கூடுதலாக ஐந்து பில்லியன்கள் உதவியை வழங்க முன் வந்துள்ளது.



இதில் 3.5 பில்லியன்கள் இலகு தவணை முறையில் அமைந்த தாகும்.

இதனிடையே வியட்நாம் 5 இலட்சம் டொலர் பெறுமதியான அரிசியையும் இலங்கை 100 தொன் தேயிலையையும் வழங்குவதற்கு முனவந்துள்ளன. ஈரான் 300 மில்லியன் டொலர்கள் வழங்க முன்வந்துள்ளது. மேலும் தனது எல்லைக்கூடாக மின்சார வசதிகளையும், ஈராக் தனது எண்ணையை ஈரானிய துறைமுகத்துக்கூடாக ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை செய்துகொடுக்கவும் முன்வந்துள்ளது. அத்துடன், சவுதி ஒரு பில்லியன் டொலரை ஈராக்கிற்கு வழங்குவதோடு, ஈராக் சவுதிக்கு கொடுக்கவுள்ள 120 பில்லியன் கடனையும் விலக்கியுள்ளது.

## பிரித்தானிய பிரஜைகள்
# சவுதி செல்ல வேண்டாம் எச்சரிக்கிறது பிரிட்டிஷ்!

பிரித்தானிய பிரஜைகளை சவுதி அரேபியாவிற்கு உல்லாசப் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டாமென, பிரித்தானியா அறிவித்துள்ளது. "ரியாட்டை" மே மாதம் தீவிரவாதிகள் தாக்கியதன் பின் இதுவரை 600 பேர் சவுதிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளளார்கள்.

இதன் பின் பிரித்தானியாவும், அவுஸ்திரேலியாவும் தமது பிராஜைகளை அந்த நாட்டிற்குச்செல்ல வேண்டாமென கே[illegible]ள்ளன.

இத[illegible]ய, திங்கட்கிழமை ப[illegible]லாமியத் தீவிரவாதிகளையும் அதிக அளவிலான ஆயுதங்களையும், வெடிப்பொருட்க[illegible]யும் கைப்பற்றியிருந்தது. அத்துடன் குண்டை உட[illegible]லில் கட்டிச் செல்லும் தற்கொலைப் போராளிகளின் பட்டிகளையும் கைப்பற்றியதாக சவுதி அரேபியா தெரிவித்தது.

சவுதி அரேபியா அண்மைக் காலத்தில் தர்ம ஸ்தாபனங்களின் மீது தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. தீவிரவாதிகளுக்கு நிதி உதவி செய்வதற்கு தர்ம ஸ்தாபனங்கள் உதவிசெய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுரங்கத்திற்குள் சிக்கியோர் காப்பாற்றப்படுவர்

ரஷ்யாவின் தென்பகுதியில் சுரங்கம் ஒன்றிற்குள் சிக்கிய சுரங்கத் தொழிலாளர்களை காப்பாற்றும் முயற்சியில் அவர்களின் இருப்பிடத்தை கண்டு பிடித்துள்ளதாகவும், அவர்களை காப்பாற்றும் முயற்சிகள் தொடர்வதாகவும் ரஷ்ய செய்தி ஸ்தாபனம் நேற்று தெரிவித்துள்ளது.

இவர்களை காப்பாற்றும் முயற்சிகளை மேற்கொண்டுவரும் நேரத்தில் இவர்களின் உறவினர்கள் சுரங்கத்திற்கு வெளியே காத்திருப்பதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தில் இருந்து 2500 அடி தூரத்தில் இவர்கள் சிக்கியுள்ளதாகவும், இரு தொகுதிகளாக உள்ள சுரங்கங்களில் ஒன்றில் 33 தொழிலாளிகளும் வேறோர் சுரங்கத்தில் 13 தொழிலாளர்களும் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.



அவுஸ்திரேலியாவிற்கு விஜயம்செய்த - அமெரிக்க ஜனாதிபதியின் விஜயத்தை எதிர்த்து அவரதும், அவுஸ்திரேலியப் பிரதமரதும் பொம்மைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்தும் ஊர்வலத்தைப் படத்தில் காணலாம்.



அண்மையில் இஸ்ரேலினால் கொல்லப்பட்ட 11 பலஸ்தீனர்களையும் அடக்கம் செய்வதனை, பலஸ்தீன சிறுவனொருவன் அவதானிப்பதனைப் படத்தில் காணலாம்.




ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா தொடுத்துள்ள போரைக் கண்டித்து பாங்கொங்கில் ஆர்ப்பாட்டம் நடத்துபவர்களில் ஒருவர் போரை நிறுத்துமாறு கோரும் சுலோகத்தை வைத்திருப்பதைப் படத்தில் காணலாம்.



தீபாவளி தினத்தில் நேபாளத்தில் நாய்களை வணங்குவதற்காக, அவைகளை மாலை அணிவித்து மக்கள் நிற்க வைத்துள்ளமையை காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

தற்போதைய சமாதான முயற்சிகள் நாட்டை இரண்டாகப் பிரித்துவிடும் என்கிறார் சந்திரிகா. ஏற்கனவே, சிங்கள அரசுகள் செய்த யுத்தத்தால் இரண்டாகியுள்ள நாட்டை சமாதான முயற்சிகள் என்று கூறிக்கொண்டு ஒட்டிவிட முயலும் மூலோபாயங்களை, கையாள முயல்கிறார் ரணில். சந்திரிகா சமாதானத்தை யுத்தத்தின் மூலம் கொண்டுவர முயன்று தோல்வி கண்டவர்.

ரணிலின் முன்னோடிகள் சமாதானம் என்று கூறிக்கொண்டு, யுத்தத்தை முன்னெடுக்க தீவிரம் காட்டி அது சாத்தியமற்றுப் போனவர்கள் .

இருதரப்பினருமே யுத்தத்தையும் சமாதானத்தையும் சமாந்தரமான தண்டவாளங்களாக்கி, அரசியல் ரயிலை செலுத்த முயன்றவர்களே.......

இதில் ஒரு பகுதி, தண்டவாளம் சறுக்கினாலும் அவர்களின் அரசியல் புரண்டுவிடும் அபாயத்தை நன்கு உணர்ந்தவர்களாகவே அவர்கள் செயற்பட்டார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் யுத்தம் - சமாதானம் இரண்டுமே முடிவற்ற பயணங்களே.....

சரி கிடக்கட்டும், திடீரென்று ஏன் சந்திரிகா தற்போதைய சமாதான முயற்சிகள் நாட்டை இரண்டாக்கிவிடும் என்கின்றார்....?

தான் ஒருவேளை ஆட்சியை, ஏதோ ஒருவழியில்கைப்பற்ற நேர்ந்து- சமாதானப் பேச்சைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், பிரிந்த நாட்டை ஒன்று சேர்க்கவே சமாதானம் பேசுகிறேன் என்று காரணம் கூறலாமல்லவா? என்கின்றார் அரசியல் ஆறுமுகத்தார். -தெருவாசி

# யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் 2 ஆவது சங்கமம் இன்று பல்கலையில்!

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, பிரதேச ஊரகப் பேராளர்களுக்கான 2 ஆவது மாவட்டச் சங்கமம், இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு, மாவட்டச் செயலாளர் சு.சிறில் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், துறைசார் விடயப் பொறுப்பாளர்கள் கலந்துகொள்வார்கள். கோட்ட ரீதியாக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

நிகழ்வில் சிறப்பம்சமாக அரசியற்துறை முக்கியஸ்தர்களின் சிறப்புரைகளும், துறைசார் வல்லுநர்களின் கருத்துரைகளும் இடம்பெறவிருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து, பேராளர்களின் கருத்துப் பகிர்வுகளும், அதற்கான தீர்மானம் எடுத்தலும் இடம்பெறும்.

அரசியல் விழிப்புணர்வு, சமூக பொருளாதார மேம்பாடுகளை முன்னெடுத்து செயல்படுத்தும், தேசிய எழுச்சிப் பேரவையின் குறிக்கோளை நிறைவேற்ற, அனைத்து ஊரக செயலாளர்களையும், பிரதேச செயலாளர், பொது நிர்வாக உறுப்பினர்களையும், கலந்துகொள்ளுமாறு, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது.

## ஆயுதக் கப்பல் குறித்த தகவலை மீன்பிடிப்படகே தந்தது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக்கு கிழக்கே சர்வதேசக் கடற்பரப்பில், கடந்த வாரம் புலிகளின் ஆயுதக் கப்பல் காணப்பட்டமை குறித்த தகவலை, பல நாட்கள் தங்கிநின்று மீன்பிடிக்கும் உள்ளூர் படகு ஒன்றே வானொலித் தொடர்பு மூலம் கடற்படைக்கு தெரியப்படுத்தியதாக, ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# அமெரிக்க ஹெலிகொப்ரர் ஈராக்கில் சுட்டுவீழ்த்தப்பட்டது



ஈராக்கின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ரிக்கிட் நகரில் ரோந்து சென்றுகொண்டிருந்த இரு அமெரிக்க பிளக்ஹோக் ஹெலிகள் மீது நேற்று இரவு நடத்தப்பட்ட ஆர்.பி.ஜீ. தாக்குதலில் ஒரு ஹெலி வீழ்ந்து நொருங்கியது. இந்தச் சம்பவத்தில் 5 அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்தனர். வீழ்ந்து நொருங்கிய ஹெலியைச் சுற்றி அமெரிக்க அபாச்சே ஹெலி ஒன்று வட்டமிடுவதைப் படத்தில் காணலாம்.

# மீனவர்கள் தாக்கப்பட்டதை...

ரும் கலந்துகொண்டனர்.

இந்த பேரணி ஆரம்பிப்பதற்கு முன்னதாக, முனைப் பகுதிகளில் பெருமளவான இராணுவத்தினர் கற்கள், தடிகளுடன் வீதியோரங்களில் நின்றனர். பொலிஸார் பாதுகாப்பாக ஊர்வலத்துடன் சென்றனர். அசம்பாவிதம் நடைபெறலாம் என்ற அச்சத்தினால், கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை, பேரணிக்கு ஆதரவு தெரிவித்து, இருமணி நேரம் கதவடைப்பு போராட்டமும் பருத்தித்துறையில் நடைபெற்றது.

படையினருக்கும், மீனவர்களுக்கும் இடையேயான முறுகல் நிலைக்கு காரணமான பாஸ் நடைமுறையை ரத்துச்செய்யவேண்டுமென, பேரணியில் கலந்துகொண்ட பலராலும் கோரிக்கை விடப்பட்டது.

இதனிடையே - பருத்தித்துறை முனைப் பிரதேசத்தில் ஆண்கள் பெண்கள் வேறுபாடின்றி, பொதுமக்கள் தாக்கப்பட்டமை, இத்தாக்குதல் சம்பவங்களை தாம் மேற்கொண்டதாக ஏற்றுக்கொள்ள படைத்தரப்பு மறுத்து வருகின்றமை, பல லட்சம் ரூபா பெறுமதியான படகுகள், கட்டுமரம் என்பன வெட்டிவிடப்பட்டமை மற்றும் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை-

இறங்குதுறையைப் புனரமைப்பதற்கு பலாலி படைத்தலைமை அனுமதித்துள்ளபோதும் - அப்பணிகளை முன்னெடுக்க மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றமை, அதனை ஆழப்படுத்துவதிலும், தமது இராணுவ நலன்களை முன்னெடுக்க படையினர் முற்படுகின்றமை, கடற்தொழில் சமூகத்துக்கு நடக்கின்ற துன்பதுயரங்களை உடனுக்குடன் வெளிப்படுத்தி- குரல்கொடுக்கும் ஊடகவியலாளர்களைத் தாக்கி, அவர்களது கருவிகளை அழித்து உடைப்பது தொடர்பாகவும், அங்கு கடும் ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டன.

இந்த எதிர்ப்புப் பேரணியின் போது, படையினருக்கு எதிராக பல கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மீனவர்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களில் ஒன்று - யாழ். அரச அதிபருக்கு, வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் சமாச செயலாளர் க.சூரியகுமாரனால் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.சிவசுவாமி மூலம் கையளிக்கப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்கான மகஜரை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர் சி.கஜேந்திரனும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மகஜரை வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வின்சன் டீ போல் மற்றும் முனை மீனவர் சங்கத் தலைவர் வ.அருள்தாஸ் ஆகியோர் கையளித்தனர்.

இதனிடையே, அங்கு வருகை தந்திருந்த கடற்தொழில் மற்றும் நீரியல்வளத்துறை, திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ. ஜோசெப்பிடம் அவரது அமைச்சுக்கான மகஜரை வல்வெட்டித்துறை மீனவர் சங்கத் தலைவர் சி.தனபாலசிங்கம் கையளித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தின் சார்பில், உல்வ் மற்றும் மெக்மர் ஆகியோர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் - என்.கே.சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா, வெகுஜன அமைப்புக்களின் செயலாளர் வின்சன் டீ போல், கடற்தொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ். ஏ.ஜோசெப் மற்றும் கடற்தொழில் பரிசோதகர் கே.தர்மலிங்கம் ஆகியோர் அங்கு நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் உரையாற்றினர். (202)

## பெண் மீதான..

அத்துடன், பாலியல் கொடுமை புரிந்த பொலிஸாரை சட்டத்தின் முன் கொண்டு வந்து, அவர்களுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்னார் மாவட்டத்தில் மக்கள் வாழ்விடங்களுக்கு அருகிலுள்ள சகல இராணுவ பொலிஸ் நிலையங்களும் அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (201)

## நேரடிப் பேச்சு...

என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் - இவர்கள் எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் பேச்சு நடத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த மாதம் 10 ஆம் திகதி கொழும்பு வரும் இவர்கள், 12 ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பர்.

## பிரதமர்...

சந்திப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகள் பற்றி யும், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றியும், அமெரிக்க ஜனாதிபதியிடம் விபரித்து கூறவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.(01)

## கிண்ணியா...

யட்சகர் கில்மன் பெர்ணாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கிண்ணியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் கிராமத்தில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த சகல தரப்பும், உதவ வேண்டுமென உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுக்கொண்டார். இதனை முஸ்லிம் தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

இதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளுக்கும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் இன்று சந்திப்பொன்று நிகழ இருக்கின்றது. (04,10)

## வட - கிழக்கு...

தக் கண்காணிப்புக் குழுவின் வேலை ஒரு நல்ல கவர்ச்சியான பணி எனக் குறிப்பிட்டார்.

## புலிகளின்...

கடந்த மாதம் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு தொடரபாக, விடுதலைப்புலிகள் முன்வைக்கவுள்ள திட்டவரைபு குறித்து கலந்துரையாடுவதற்காக மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் ஆகியோரைப் புலிகளின தலைமை வன்னிக்கு வர வழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.